வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 09.07.2025 புதன்கிழமை | இதழ் : 189 | பக்கங்கள் : 12

# நீங்கள் தெற்கை சீனாவுக்கு கொடுங்கள் வடக்கு, கிழக்கை இந்தியாவுக்கு விடுங்கள்

## பாராளுமன்றில் கூறினார் செல்வம் எம். பி.

கொழும்பு, ஜூலை 09

**தென்னிலங்கையை சீனாவுக்கு கொடுங்கள் - வடக்கு, கிழக்கை இந்தியாவிடம் கொடுங்கள். நாங்கள் அதனைப் பார்த்துக் கொள்வோம். பொருளாதார நெருக்கடியின்போது இந்தியா இலங்கைக்கு உதவிக்கரம் நீட்டியதை மறந்து விட்டு இந்தியாவுக்கு எதிராகப் பேசக்கூடாதென ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பாரா ளுமன்ற உறுப்பினரும் ரெலோ தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத் தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியின் ஒழுங்கு விதிகள் மீதான விவாதத் தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தலைமன்னார்- இராமேஸ்வரம் கப்பல் சேவையை ஆரம்பிக்க



வேண்டும். இதன் மூலம் சுற்றுலாத்துறையை விஸ்தரிக்க முடியும்

11

## நயினை அம்மனுக்கு இன்று தேர்

யாழ்ப்பாணம், ஜூலை 09

வரலாற்று சிறப்பு மிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று புதன்கிழமை காலை நடைபெறவுள்ளது.

அதிகாலை 4 மணியளவில் பூசைகள் ஆரம்பமாகி வசந்த மண்டப பூசை காலை 07 மணிக்கு நடைபெறும். அதனைத் தொடர்ந்து அம்பாள் உள்வீதியுலா

11

## அமெரிக்காவின் தீர்வை வரி சாதகமான தீர்வு கிடைக்கும்

### அரசாங்கம் நம்பிக்கை

கொழும்பு, ஜூலை 09

அமெரிக்கா உலக நாடுகளுக்கு விதித்துள்ள பரஸ்பர தீர்வை வரி பற்றி மாறுபட்ட பல கருத்துகள குறிப்பிடப் படுகின்றன. இந்த வரி இலங்கைக்கு மாத்திரம் விதிக்கப்படவில்லை என்பதை எதிர்க்கட்சிகள் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். தீர்வை வரி தொடர்பில் அமெரிக்காவுடன் வெகுவிரைவில் இருதரப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும். சாதகமான தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம் என பொருளாதார திட்டமிடல் பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

11

## ஓமந்தை அரச காணியில் பொலிஸாரின் துப்புரவு பணி நிறுத்தம்

### அமைச்சர் ஆனந்த விஜயபால

கொழும்பு, ஜூலை 09

வவுனியா, ஓமந்தை பொலிஸ் நிலையம் அருகில் உள்ள காணியை பொலிஸார் துப்புரவு செய்யும் வேலை நிறுத்தப் பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஓமந்தை பொலிஸார் அத்துமீறி சென்று துப்புரவு செய்து அதில் விகாரை அமைக்க மேற்கொண்ட முயற்சி அப்பகுதி மக்களால் தடுத்து நிறுத்தப்பட்டது.

இந்நிலையில் இவ்விடயம்

11

## "உப்பைக்கூட இறக்குமதி செய்யும் நிலையில் அரசு"

கொழும்பு, ஜூலை 09

விவசாயம், கடற்றொழில் துறைகள் போன்று இல்லாமல் நாட்டில் சில உப்பு உற்பத்தி நிறுவனங்களே உள்ளன. இந்த சில நிறுவனங்களை கையாள முடியாமல் உப்பை இறக்குமதி செய்ய

11



வரலாற்று பிரசித்திபெற்ற கதிர்காமம் முருகன் ஆலயத்தில் நேற்று நடைபெற்ற தீ மிதிப்பு திருவிழாவின்போது...!

## ஓமந்தை அரச காணியில் விகாரை; பொலிஸாரின் முயற்சி நிறுத்தப்பட்டது

வவுனியா, ஜூலை 09

ஓமந்தை பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில் உள்ள அரச காணிக்குள் ஓமந்தை பொலிஸார் அத்துமீறிச் சென்று துப்புரவு செய்து அதில் விகாரை அமைக்க மேற்கொண்ட முயற்சி நேற்று மதியம் 12 மணியளவில் அப்பகுதியில் கூடியவர்களால் தடுத்து நிறுத்தப்பட்டது.

ஓமந்தையின் ஏ-9 வீதியில் பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில் தனியார் உரிமை கோரி வரும் அரச காணி ஒன்றை பொலிஸார் துப்புரவு செய்து அதனைச் சுற்றி வேலி

11

## அரியாலை மனித புதைகுழி தொடர்பில் வழக்கு தாக்கல் செய்தவருக்கு அச்சுறுத்தல்

பு. கஜிந்தன்

யாழ்ப்பாணம், ஜூலை 09

அரியாலை விடயம் குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த குறித்த மயானத்தின் நிர்வாக சபை உறுப்பினரான கிருபாகரன் தனக்கு அச்சுறுத்தல் இருப்பதாக தெரிவித்துள்ளார்.

நேற்று அரியாலை மனிதப் புதைகுழி அருகே ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மர்ம வாகனம் அரியாலை - சித்துப்பாத்தி மயானத்தை நோட்டமிடுகிறதென ஊடகங்களில் செய்திகள் வெளிவந்தன. அந்த செய்திகள் முற்று முழுதான உண்மை. அந்த மர்ம வாகனமானது எனது வீட்டு அருகாமையிலும் வந்திருந்தது. வழக்காளியான என்னை அச்சுறுத்துவதே இதன்

11

## அரியாலை மனித புதைகுழியில் நேற்றும் நான்கு எலும்புக்கூடுகள்

பு. கஜிந்தன், த. பிரதீபன்

யாழ்ப்பாணம், ஜூலை 09

அரியாலை சித்துபாத்தி மனிதப் புதைகுழியில் இதுவரை 56 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப் பட்டுள்ளன.

இதில் 50 மனித எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

11

## சர்வதேச விசாரணைகளுக்கான சாட்சியமே செம்மணி புதைகுழி

### சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 09

"ஈழத்தமிழர்கள் மீதான இனப்படுகொலைகளுக்கோ, போர்க்குற்றங்களுக்கோ முள்ளிவாய்க்காலை மட்டும் சாட்சியமாகக் கொள்ள முடியாது. ஆனால், இலங்கை சுதந்திரமடைந்ததாகச் சொல்லப்படும் 1948களிலிருந்து இன்று வரை ஈழத்தமிழர்கள் மீது பௌத்த மேலாதிக்கவாதிகளால்

11

**அரியாலை மனித புதைகுழி**

## நீதிமன்ற செயல்பாடுகளுக்கு அரசு முழுமையான ஆதரவு

கொழும்பு, ஜூலை 09

அரியாலை மனிதப் புதைகுழி விவகாரத்தில் நீதிமன்ற செயல்பாடுகளுக்கு அரசாங்கம் முழுமையாக ஆதரவு வழங்குவதாக அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை

11

## "வடக்கு - கிழக்கில் காணி அபகரிப்பு மக்களின் நம்பிக்கையை சிதைக்கும்"

கொழும்பு, ஜூலை 09

வடக்கு மற்றும் கிழக்கில் காணிகள் விடுவிக்கப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டாலும் முப்படையினர் பல்வேறு வழிகளில் காணி அபகரிப்பு செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள். அரசாங்கம் ஒரு கொள்கையில் இருக்கையில் வடக்கு மற்றும் கிழக்கில்

11

**உண்மைகள் புனிதமானவை: கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# பாரிய வனப் பகுதியை அழித்து தமிழ் மக்களின் நிலம் அபகரிப்பு

## ரவிகரன் எம்.பி. நேரில் பார்வை



வவுனியா, ஜூலை 09

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட வெடிவச்சகல்லு கிராம அலுவலர் பிரிவில் திரிவச்சகுளத்தின் கீழான தமிழ் மக்களின் வயல் நிலங்கள் பெரும்பான்மை இனத்தவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதுடன், மகாவலி திட்டத்தினூடாக சுமார் 1000 ஏக்கர் வரையான வனப்பகுதிகளும் பெரும்பான்மை இனத்தவர்களால் அழிக்கப்பட்டு ஆக்கிரமிப்பு முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் குறித்த பகுதிக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன், இது தொடர்பில் அப்பகுதிக்குரிய வனவளத் திணைக்கள உத்தியோகத்தருடனும், வவுனியா வடக்கு பிரதேச செயலருடனும் கலந்துரையாடியுள்ளார்.

இதேவேளை இந்த ஆக்கிரமிப்பு முயற்சியைத் தடுப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட, வெடிவச்சகல்லு கிராம அலுவலர் பிரிவில், திரிவைச்சகுளம் பகுதி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பெரும்பான்மை இனத்தவர்களால் தமிழ் மக்களின் பூர்வீக விவசாயக் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளதுடன், மகாவலி (எல்) வலயத் திட்டத்தினூடாக பாரிய வனப் பகுதிகளும் பெரும்பான்மை இனத்தவர்களால் பெருமளவில் அழிக்கப்பட்டு ஆக்கிரமிப்புச் செயற்பாடுகள் மிகத் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் அப்பகுதி மக்களின் அழைப்பையேற்று ரவிகரன் எம். பி. குறித்த பகுதியை நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

இந் நிலையில் தமிழ் மக்கள் பூர்வீகமாக பயிர் செய்கை மேற்கொண்டுவந்த திரிவைச்சகுளம் பகுதியை முற்றாக அபகரித்துள்ள பெரும்பான்மையினத்தவர்கள் அங்கு நெற்பயிர் செய்கை மேற்கொண்டுவருவதை பாராளுமன்ற உறுப்பினர் பார்வையிட்டார்.

அத்தோடு மகாவலி (எல்) வலயத் திட்டத்தினூடாக திரிவைச்சகுளம் பகுதியை அண்டியுள்ள வனப்பகுதிகளில், சுமார் 1000 ஏக்கர் வரையில் பெரும்பான்மை இனத்தவர்களால் சட்டவிரோத காடழிப்பு மேற்கொள்ளப்பட்டு அபகரிக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பாகவும் பாராளுமன்ற உறுப்பினர் நேரடியாகப் பார்வையிட்டார்.

இதனைத் தொடர்ந்து இது தொடர்பில் வனவளத் திணைக்கள உத்தியோகத்தர், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் ஆகியோரையும் ரவிகரின் சந்தித்து கலந்துரையாடினார். (அ)

# இரத்த புற்றுநோய் காரணமாக வடமராட்சி மாணவி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 09

இரத்தப்புற்று நோய் காரணமாக வடமராட்சியைச் சேர்ந்த மாணவியொருவர் கொழும்பில் உயிரிழந்தார்.

கொழும்பு மகரகம தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இவர் நேற்று முன் தினம் மாலை உயிரிழந்தார் எனத் தெரியவருகின்றது.

கரணவாய் மூத்த விநாயகர் கோவில் பகுதியைச் சேர்ந்த 19 வயதான சுகந்தன் பூமிகா என்ற என்ற பாடசாலை மாணவியே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை மாணவி ஆவார்.

பாடசாலை மாணவி உயிரிழந்த சம்பவம் கரணவாயில் பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. (அ)

# இலங்கைக்குக் கடத்த முயன்ற 1200 கிலோ பீடி இலைகள் மீட்பு

சென்னை, ஜூலை 09

தூத்துக்குடி விவேகானந்தர் காலனி கடற்கரையில் இருந்து இலங்கைக்கு பைபர் படகு மூலம் கடத்த முயன்ற 40 இலட்சம் ரூபாய் பெறுமதியான சுமார் 1200 கிலோ எடை கொண்ட பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளன.

தூத்துக்குடி கடற்பகுதி வழியாக நாள்தோறும் இலங்கைக்கு பீடி இலைகள், மஞ்சள், மாத்திரைகள், அழகு சாதனப் பொருட்கள், போதை பொருட்கள் ஆகியவை படகு மூலம் கடத்தப்படும் சம்பவம் நடைபெற்று வருகிறது.

இதைத் தடுக்கும் வகையில் பொலிஸார் மாவட்டம் முழுவதும் கடற்பகுதிகளில் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில், தூத்துக்குடி தாளமுத்து நகர் அருகே உள்ள விவேகானந்தர் காலனி கடற்கரைப் பகுதி வழியாக பீடி இலைகள் கடத்தப்படுவதாக கியூ பிரிவு காவல் ஆய்வாளருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து குறித்த பீடி இலைகள் மீட்கப்பட்டன.

அத்துடன் கடத்தலுக்கு பயன்படுத்தியிருந்த பதிவு எண் இல்லாத நவீன பைபர் படகு இரு சக்கர வாகனம் ஆகியவற்றை கியூ பிரிவு பொலிஸார் பறிமுதல் செய்தனர். (அ)

# இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் திரும்பியோருக்கு உதவி தொகை



யாழ்ப்பாணம், ஜூலை 09

இந்தியாவிலிருந்து மீளத் திரும்பியவர்களின் சுமுகமான மீள் ஒருங்கிணைப்பிற்கான உதவித் தொகையானது யாழ். மாவட்ட செயலர் ம. பிரதீபனால் வழங்கப்பட்டது.

மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற இந் நிகழ்வில் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் ந. தயாபரன், அபிவிருத்தி உத்தியோகத்தர் வைலட் நிக்லஸ் மற்றும் ஓவர் சிலோன் இணைப்பாளர் இ. பிரபாகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அகதிகளுக்கான ஐ. நா. அமைப்பின் ஓவர் சிலோன் நிறுவனத்தால் 90 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை தலா ஒருவருக்கு வழங்கப்பட்டது.

அந்த வகையில், நல்லூர், சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் மீளத் திரும்பிய 05 குடும்பங்களை சேர்ந்த 8 பேருக்குமாக ரூபா 7 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட்டது. (அ)

# டிப்பர்மீது பொலிஸார் சூடு

கிளிநொச்சி, ஜூலை 09

கிளிநொச்சி - தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாறு பகுதியில் நேற்று முன் தினம் இரவு பொலிஸாரின் சமிக்ஞையை மீறி சென்ற டிப்பர் மீது பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர்.

சட்டவிரோதமாக அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனத்தை புளியம்பொக்கணை சந்திப் பகுதியில் வைத்து பொலிஸார் மறித்து சோதனை செய்ய முற்பட்டபோது, சமிக்ஞையை மீறி சென்ற டிப்பர் மீது பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர்.

பொலிசாரின் துப்பாக்கி பிரயோகத்தில் டிப்பர் வாகனம் காற்றுபோன நிலையில் வாகனத்தை விட்டு சாரதி தப்பியோடியுள்ளார்.

மணல் மற்றும் டிப்பர் வாகனத்தை மீட்ட பொலிஸார் சாரதியை தேடி வருகின்றனர். (அ)

# போதைப்பொருளுக்கு அடிமையானோருக்கு வடக்கு மாகாணத்தில் மறுவாழ்வு நிலையம்!

## ஆளுநர் தலைமையில் நேற்று ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூலை 09

உயிர்கொல்லி போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை மற்றும் மறுவாழ்வு வழங்குவதற்கான நிலையத்தை வடக்கில் அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கலந்துரையாடலுக்கு வருகை தந்த தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் பணிப்பாளர் நாயகம் எஸ். கொத்தலாவல தலைமையிலான குழுவினரை வரவேற்ற ஆளுநர், வடக்கு மாகாணத்தில் உயிர்கொல்லி போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் நிலையில் உடனடியாக சிகிச்சை மற்றும் மறுவாழ்வு வழங்கும் நிலையத்தை ஆரம்பிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். இது தொடர்பில் கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் அவர் விவரித்தார்.

தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் நடவடிக்கைகள் தொடர்பிலும், இந்த ஆண்டுக்குள் வடக்கில் சிகிச்சை மற்றும் மறுவாழ்வு நிலையத்தை ஆரம்பிக்க வேண்டும் என்ற நிலைப்பாடு தொடர்பிலும் பணிப்பாளர் நாயகம் விளக்கமளித்தார்.

பாடசாலைகளிலுள்ள உளவள ஆசிரியர்களுக்கு பயிற்சிச் செயலமர்வுகளை நடத்தி அவர்கள் ஊடாக மாணவர்களுக்கு விழிப்புணர்வுச் செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அத்துடன் சமூக மட்டத்திலும் அத்தகைய விழிப்புணர்வுச் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என ஆளுநர் வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணம் தவிர்ந்த வடக்கின் ஏனைய 4 மாவட்டங்களிலும் தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் அலுவலர்கள் இல்லை என்ற விடயமும் முன்வைக்கப்பட்டது. தற்போது அபிவிருத்தி அலுவலர்களாகப் பணியாற்றுபவர்களில் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு பயிற்சிகள் வழங்குவதன் ஊடாக இதனை நிவர்த்தி செய்வதற்கு ஆலோசிக்கப்பட்டது.

சிகிச்சை மற்றும் மறுவாழ்வு நிலையத்தை அமைப்பதற்கான பொருத்தமான இடங்கள் தொடர்பில் இதன் பின்னர் ஆராயப்பட்டது. நிரந்தரமான இடமே அவசியம் என தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார். இதற்கு அமைவாக கிளிநொச்சி கிருஸ்ணபுரம் மற்றும் முல்லைத்தீவு நகரிலுள்ள பாதுகாப்பு இல்லம் ஆகியவற்றைப் பார்வையிட்டு பொருத்தமான இடத்தை தெரிவு செய்வதாக பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

மேலும், ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியாகவும் உதவிநாடும் நிலையம் அமைப்பதற்கு போதிய இட வசதியுள்ள பிரதேச மருத்துவ மனைகளைப் பயன்படுத்தவும் ஆலோசிக்கப்பட்டது. முதல் கட்டமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு சேவை மையங்களை அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டது. விரைவாக அதனைச் செய்து முடிக்க வேண்டும் எனவும் ஆளுநர் இதன்போது பணிப்புரை விடுத்தார்.

இந்தக் கலந்துரையாடலில், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட செயலர்கள், கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர், வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்கள ஆணையாளர், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் நேரடியாகவும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி "சூம்" செயலி ஊடாக இணைந்து கொண்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
09.07.2025 புதன்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 25

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ஒன்றிணைவின் சாத்தியம்

பொறுப்புக்கூறல் விடயத்தில் அனைத்து தமிழ் கட்சிகளுடனும் சிவில் சமூக அமைப்புகளுடனும் ஒன்றிணைந்து செயல்படுவது தொடர்பில் மீண்டும் பேசவுள்ளதாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருக்கிறார்.

இவ்வாறான அறிவிப்புகள் தமிழ் அரசியல் சூழலுக்கு புதிது அல்ல – அதேவேளை தமிழ் கட்சிகள் கூட்டாக கடிதம் எழுதுவதும் பின்னர் பிரிந்து நின்று ஒருவரையொருவர் தாக்குவதும் கடந்த காலத்தில் தாராளமாக நடந்திருக்கின்றன. இதேபோன்று சிவில் சமூகக் குழுக்கள் என்று தங்களை அழைத்துக் கொள்பவர்களும் இவ்வாறான முயற்சிகளை அவ்வப்போது மேற்கொண்டு பின்னர் நிலைமைகளை மேலும் குழப்பிவிட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. தமிழ் பொது வேட்பாளர் விடயம் இதற்கான மிக அண்மைய உதாரணமாகும்.

இவ்வாறானதொரு பின்புலத்தில் பொது இணக்கப்பாட்டின் அடிப்படையில் தமிழ் கட்சிகள் ஒன்றிணைவது என்பதற்கு முன்னர் பொது வேலைத்திட்டம் என்ன என்பது தொடர்பில் தெளிவான உரையாடல்கள் நடைபெற வேண்டும். ஏனெனில், தமிழ் கட்சிகளில் ஒப்பீட்டு அடிப்படையில் பெரிய கட்சிகளும் இருக்கின்றன. இதேபோன்று ஒரு சிறிய காரில் கட்சியின் அனைத்து உறுப்பினர்களையும் அழைத்துக் கொண்டு செல்லக்கூடிய கட்சிகளும் இருக்கின்றன. அவர்களும் தங்களை ஒரு கட்சியாக அடையாளப்படுத்த முயற்சிக்கின்றனர். இவ்வாறானவர்களுடன் பேசுவதற்கு பிரதான கட்சிகள் எந்தளவு முன்வரும் என்னும் அரசியல் யதார்த்தத்தையும் புரிந்து கொள்ளத்தான் வேண்டும்.

உதாரணமாக, இலங்கை தமிழ் அரசு கட்சி வடக்கு, கிழக்கில் அதிக செல்வாக்கைக் கொண்டிருக்கும் கட்சி. அதன் அரசியல் அணுகுமுறை தொடர்பில் விமர்சனங்கள் இருந்தாலும்கூட அதுதான் உண்மை. இந்தப் பின்புலத்தில் பலவீனமாக இருக்கின்ற ஒரு கட்சி, அனைத்து கட்சிகளையும் சிவில் சமூக குழுக்களையும் ஒன்றிணைக்க முயற்சிக்கும்போது நடைமுறையில் அது சிக்கலான ஒன்றாகவே நோக்கப்படும். ஏனெனில், அனைத்துக் கட்சிகளும் தேர்தல் நலன்களை முன்னிறுத்தி செயல்படும் கட்சிகள். இலங்கை தமிழ் அரசுக் கட்சியை உள்ளூராட்சி சபைகளில் தோற்கடிக்கும் நோக்கில்தான் காங்கிரஸ் – ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி கூட்டு செயல்பட்டிருந்தது. இவ்வாறானதொரு சூழலில் பொது வேலைத்திட்டம் ஒன்றின் கீழ் எவ்வாறு ஒன்றுபடுவது? அதற்கு காங்கிரஸ் எவ்வாறு தலைமை தாங்க முடியும்?

முற்றிலும் புதிய தரப்பொன்று மக்களின் நலனை முன்னிறுத்தி இந்த விடயத்தை முன்னெடுப்பதுதான் சரியானது. ஏற்கனவே, சிவில் சமூகமாகத் தங்களை அடையாளப்படுத்தியவர்கள் அரசியல் கட்சிகளின் நம்பிக்கை பெறத் தவறிவிட்டனர். அதேபோன்று பல்கலைக்கழக மாணவர்களும் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கும் நம்பகத்தன்மையை இழந்து விட்டனர். இவர்களின் கடந்த கால செயல்பாடுகள் பெருமளவுக்கு சார்பு நிலையிலேயே அமைந்திருந்தன. எனவே, புதிய தரப்பொன்று இந்த விடயத்தை கையாளுவதுதான் சரியானது – அவ்வாறான புதிய தரப்பும் நடைமுறைக்கு சாத்தியமான விடயங்களை உள்வாங்கியே சிந்திக்கவும் – செயல்படவும் வேண்டும். இல்லாவிட்டால் இவ்வாறான இணைப்பு முயற்சிகளால் பயனில்லை.

## நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள அனைத்து விடுதிகளையும் பதிவு செய்ய வேண்டும்

யாழ்ப்பாணம், ஜூலை 09

நல்லூர் பிரதேச சபை ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து விடுதிகளையும் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்ய வேண்டும் எனவும், தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதேச சபை தவிசாளர் ப. மயூரன் அறிவித்துள்ளார்.

அது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

நல்லூர் பிரதேச சபைக் குட்பட்ட பகுதிகளுக்குள் காணப்படும் அனைத்து விடுதிகள், தனியார் மாணவர் விடுதிகள், வீடுகளில் அறை கொடுத்து பணம் பெற்றுக்கொள்ளும் வீட்டின் உரிமையாளர்கள் மற்றும் வீடுகளை நாளாந்த வாரந்த மாதாந்த அடிப்படையில் வாடகைக்கு வழங்குபவர்கள் அனைவரும் எதிர்வரும் 30ஆம் திகதி மாலை 4 மணிக்கு முன்னர் நல்லூர் பிரதேச சபையில் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை நல்லூர் பிரதேச சபையின் தலைமைக் காரியாலயம், கொக்குவில் உப அலுவலகம், நல்லூர் உப அலுவலகம் ஆகியவற்றில் பெற்றுக்கொள்ள முடியும்.

பெற்றுக்கொண்ட விண்ணப்ப படிவங்களினை பூரணப்படுத்தி எதிர்வரும் 30ஆம் திகதி புதன் கிழமை மாலை 4 மணிக்கு முன்னர் மேற்குறிப்பிட்ட அலுவலகங்களில் ஒப்படைக்க வேண்டும்.

நல்லூர் பிரதேச சபையின் இந்த பகிரங்க அறிவித்தலை உதாசீனம் செய்து தங்களுடைய விடுதிகளை நல்லூர் பிரதேச சபையில் குறித்த காலப் பகுதிக்குள் பதிவு செய்யாமல் இருப்பவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கைகளை நல்லூர் பிரதேச சபை மேற்கொள்ளும்- என்றுள்ளது. (அ)

## சிறுவருக்கு எதிரான வன்முறை முறையிட தொலைபேசி இலக்கம்

கொழும்பு, ஜூலை 09

சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகள் தொடர்பில் முறைப்பாடு அளிப்பதற்கு பொலிஸ், சிறுவர், மகளிர் பணியகத்தின் 109 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுமாறு பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சிறுவர்களை யாசகம் மற்றும் கடினமான தொழில்களில் ஈடுபடுத்துதல், துன்புறுத்துதல், துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் பொலிஸாருக்கு உடனடியாக தகவல் வழங்குமாறு பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

## சிகரெட்களுடன் இளைஞர் கைது!

கொழும்பு, ஜூலை 09

சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்களுடன் இளைஞரை பொலிஸார் கைது செய்துள்ளனர். காலி கைதான சந்தேகநபர் பூஸாவை சேர்ந்த 25 வயதுடையவராவார்.

சந்தேக நபரிடமிருந்து 4 ஆயிரத்து 600 வெளிநாட்டு சிகரெட்கள் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

## தடை உத்தரவையும் மீறி வவுனியாவில் அடாத்தாக காணி பிடிக்கும் பொலிஸார்

### சபையில் அர்ச்சுனா எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 09

வவுனியா – ஓமந்தைப் பொலிஸார், பொலிஸ் நிலையம் அருகில் உள்ள தனிநபருக்கு சொந்தமான காணியினை ஆக்கிரமித்து வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா பாராளுமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு சென்றார்.


நேற்று பாராளுமன்றத்தில் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் குறித்த காணியை பொலிஸார் கையகப்படுத்த முடியாது எனவும், அதற்குள் செல்லக் கூடாது எனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அத் தீர்மானத்தையும் மீறி பொலிஸார் மீண்டும் காணியை ஆக்கிரமிக்கும் செயல்பாட்டில் ஈடுபடுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

வவுனியா பிரதேச செயலகத்தில் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் குறித்த காணியை பொலிஸார் கையகப்படுத்த முடியாது எனவும், அதற்குள் செல்லக் கூடாது எனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து, குறித்த காணிக்குள் ஓமந்தைப் பொலிஸார் நுழைவதற்கு தடை விதித்து வவுனியா பிரதேச செயலாளர் இ. பிரதாபனால் ஓமந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை - 09 புதன்கிழமை
விசுவாவசு வருடம் - ஆனி 25
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : ....



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்னச் சின்ன கவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் பாக்கிகளை வசூலிப்பதில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

**இடபம்**
தன்னம்பிக்கையுடன் பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் புது சலுகைகள் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**மிதுனம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்கள் நண்பர்கள் உங்களை ஆலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். அதிகாரிகள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். அமோகமான நாள்.

**கடகம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உறவினர்கள் மதிப்பார்கள். வியா பாரத்தில் புது தொடர்புகள் கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

**சிம்மம்**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். புதிய வேலை கிடைக்கும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**கன்னி**
குடும்பத்தினருடன் கலந்தா லோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங் களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும். விழிப்புணர்வு தேவைப்படும்.

**தனுசு**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் குறையும். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்

**மகரம்**
உங்கள் இலக்குகளை நோக்கி முன்னேறுவீர்கள். பெறறோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உங்கள் கை ஓங்கும்.

**கும்பம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலைக்கு தகுந்தார் போல் பொறுப்பாக இருப்பார்கள். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்

**மீனம்**
குடும்பத்தாரின் விருப்பங் களை நிறைவேற்றுவீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். மரியாதைக் கூடும். புதிய பாதை தெரியும் நாள்.

# ஓமந்தை பொலிஸார் தனியார் காணிக்குள் நுழையத் தடை!

## வவுனியா பிரதேச செயலாளர் அதிரடி உத்தரவு

வவுனியா, ஜூலை 09

வவுனியாவில் பொலிஸ் நிலையம் அருகில் உள்ள தனியாருக்குச் சொந்தமான காணியை ஆக்கிரமித்து வருவதாக குற்றஞ் சாட்டப்பட்ட நிலையில் குறித்த காணிக்குள் ஓமந்தை பொலிஸார் நுழைய வவுனியா பிரதேச செயலாளரால் தடை விதிக்கப் பட்டுள்ளது.

வவுனியா, ஓமந்தைப் பொலிஸ் நிலையத்துக்கு என பிறிதொரு இடத்தில் காணி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் அவர்கள் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான காணியில் நிலை கொண்டுள்ளனர். குறித்த காணிக்கு அருகில் இருந்த தனி நபர் ஒருவரின் காணியையும் அபகரித்துள்ள பொலிஸார் அதனைத் துப்புரவு செய்து கையகப் படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் அரசியல் வாதிகளின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்ட நிலையில் வவுனியா பிரதேச செயலகத்தில் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் குறித்த காணியை பொலிஸார் கையகப்படுத்த முடியாது எனவும், அதற்குள் செல்லக் கூடாது எனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதனையும் மீறி நேற்று முன்தினமும் பொலிஸார் குறித்த காணிக்குள் சென்று துப்புரவு பணிகளில் ஈடுபட்ட போது காணி உரிமையாளரும் வவுனியா தெற்கு பிரதேச சபை தவிசாளர் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா தெற்கு பிரதேச சபை உறுப்பினர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட அமைப்பாளர் ஆகியோர் சென்று பொலிஸாருடன் முரண்பட்டதுடன், அரச அதிபர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோரின் கவனத்துக்கும் கொண்டு வந்தனர்.

இதனையடுத்து, ஒருங்கிணைப்புக் குழுக் கூட்ட தீர்மானத்துக்கு அமைய குறித்த காணிக்குள் ஓமந்தை பொலிஸார் நுழைவதற்கு தடை விதித்து வவுனியா பிரதேச செயலாளர் இ. பிரதாபனால், ஓமந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (எ-10)

# யாழ். இந்தியத் துணைத் தூதுவருடன் காரைநகர் பிரதேச சபையினர் சந்திப்பு




யாழ்ப்பாணம், ஜூலை 09

யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளிக்கும் காரைநகர் பிரதேச சபையினருக்கும் இடையே இந்தியத் துணைத் தூதரகத்தில் நேற்று முன்தினம் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது கடல்நீரை சுத்திகரித்து குடிநீராக்கி காரைநகருக்கு வழங்குதல், பொன்னாலை பாலத்துக்கு 3 மைல் நீளத்துக்கு 80 இலட்சம் ரூபாய் செலவில் சோலர் மின்விளக்கு பொருத்துதல், வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு 175 மில்லியன் ரூபாய் செலவில் வீட மைப்பு திட்டங்கள் வழங்கல் போன்ற கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன. (எ-05)

# ஆனந்தவர்மன் பிணையில் விடுவிப்பு



வவுனியா, ஜூலை 09

ஒரு வருடத்துக்கும் மேலாக பயங்கரவாதச் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் போராளிகள் நலன்புரிச் சங்க வவுனியா மாவட்ட தலைவர் ஆனந்தவர்மன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் விடுதலைப் புலிகளை ஊக்குவிக்கும் வகையில் முகநூலில் பதிவுகள் இட்டதாக ஆனந்தவர்மன் கைதாகியிருந்தார். ரி.ஐ.டியினரால் குறித்த முகநூல் பதிவு தொடர்பில் வாக்கு மூலம் பெறுவதற்காக அழைக்கப்பட்ட நிலையில் அவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப் பட்டு ஒரு வருடத்துக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

ஏற்கனவே கைது செய்யப் பட்டு பல வருடங்களாக அரசியல் கைதியாக தடுத்து வைக்கப் பட்டிருந்து நீதிமன்ற உத்தரவுக் கமைய அவர் விடுவிக்கப்பட்டிருந்தார். இதன்பின் வவுனியாவில் அவர் வசித்து வந்ததுடன் போராளிகள் நலன்புரிச் சங்கம் என்ற அமைப்பின் தலைவராக செயல்பட்டு வந்த நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டு மீண்டும் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் அவர் தற்போது பிணையில் விடுவிக் கப்பட்டுள்ளார். (எ- 10)

# வீதியைப் புனரமைத்து தருமாறு மினாநகர் மக்கள் ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஜூலை 09

வவுனியா, மினாநகர் மக்கள் தமது பிரதான வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரி கவன வீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மினாநகர் பிரதான வீதி, நெளுக்குளம் - நேரியகுளம் வீதியில் சந்திக்கும் சந்தியில் குறித்த கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று முன்தினம் ன்னெடுக்கப் பட்டது. இதன்போது போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவிக்கையில், சூடுவெந்தபுலவு, மினாநகர் கிராமமானது 2013 ஆம் ஆண்டு குடியேற்றம் செய்யப்பட்ட கிராமமாகும். இந்தக் கிராமத்தின் பிரதான வீதியானது 12 வருடங்களாக புனரமைப்பு செய்யப்படாமல் உள்ளது. தினசரி கல்குவாரி டிப்பர் வாகனங்கள் செல்வதால் பிரதான வீதி சேதமடைந்து ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது.

இங்கு சுமார் 200 இற்கும் அதிகமான குடும்பங்கள் வசித்து வருவதுடன், தினமும் 50 இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள், நோயாளிகள் என இவ் வீதியில் பயணிக்கின்றனர். அண்மையில் ஒரு மாணவன் மோசமான நிலையில் விபத்துக்கு உள்ளாகி இருந்தார்.

எனவே, எங்களுக்கு இந்த வீதி தொடர்பான தெளிவினை ஏற்படுத்தி வீதியைப் புனரமைத்து தந்து, கல்குவாரி செல்லும் கனரக வாகனங்களுக்கு வேறு பாதை அமைத்துத் தருமாறும் கேட்டுக்கொள்கிறோம் எனத் தெரிவித்தனர். (எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரைக் காப்பாற்றிய பஸ் நடத்துநருக்கு விருது

கொழும்பு, ஜூலை 09

குருநாகலில் பஸ் விபத்தைத் தடுக்கவும், மாணவிகளின் உயிரைக் காப்பாற்றவும், சாதுரியமாக செயற்பட்ட, பாடசாலை பஸ்ஸின் நடத்துநர் ஒருவருக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

பாடசாலை நிர்வாகம் இந்த விருதை வழங்கியுள்ளது.

மாணவிகளை ஏற்றிச் செல்லும் போது, பஸ்ஸின் சாரதி திடீரென மாரடைப்பால் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

சாரதிக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டபோது, நடத்துநர் உடனடியாக செயற்பட்டு வாகனத்தை இடதுபுறமாகத் திருப்பி மின்சார கம்பத்தில் மோதச்செய்துள்ளார்.

இந்த செயற்பாட்டை அவர் மேற்கொள்ளாதிருந்தால், குறித்த பஸ் வலதுபுறத்தில் உள்ள பாரிய பள்ளத்தாக்கில் வீழ்ந்திருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பாடசாலைகளில் இன்று நுளம்பு கட்டுப்பாட்டு தினம்

கொழும்பு, ஜூலை 09

நாடு தழுவிய தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தின் ஒரு பகுதியாக, நாடு முழுவதும் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் இன்று தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் ஆசிரியர் பயிற்சி கல்லூரிகளில் இன்று காலை 8:00 மணி முதல் பிற்பகல் 1:00 மணி வரை துப்புரவு பணிகள் மற்றும் நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று பாடசாலைக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எச்.எச். சஞ்சீவனி தெரிவித்தார்.

இந்த சிறப்பு முயற்சி நுளம்பு இனப்பெருக்கம் செய்யும் இடங்களைஅழிப்பதோடு மாணவர்கள் மற்றும் ஊழியர்களிடையே நுளம்புகளால் பரவும் நோய்களைத் தடுப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு திட்டமிடப்பட்டுள்ளது. (அ)

# "ஜனாதிபதி ஊடகப் பிரிவினரின் பெயர்களை வெளியிட முடியாது"

கொழும்பு, ஜூலை 09

ஜனாதிபதி ஊடகப் பிரிவில் இணைக்கப்பட்டுள்ள அதிகாரிகளின் பெயர்களை வெளியிட முடியாது என்று ஜனாதிபதி செயலகம் சமூக ஆர்வலர் அனுருத்த பண்டாரவுக்கு அறிவித்துள்ளது.

ஜனாதிபதியின் மூத்த உதவிச் செயலாளர் ஜி.பி.எச். எம்.குமாரசிங்க, ஜூலை 4, 2025 திகதியிட்ட அனுருத்த பண்டாரவுக்கு எழுதிய கடிதத்தில், கோரப்பட்ட தகவல்கள் 2016 ஆம் ஆண்டு 12ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 5(1) இன் கீழ் "தனிப்பட்ட தகவல்" என்று கூறி பெயர்களை வெளியிட மறுத்துவிட்டார்.

இருப்பினும், ஒரு பணிப்பாளர் நாயகம், ஒரு ஆலோசகர் மற்றும் ஆறு இயக்குநர்கள் உட்பட சுமார் 90 ஊழியர்கள் தற்போது ஜனாதிபதியின் ஊடகப் பிரிவில் பணியாற்றி வருவதாக ஜனாதிபதி செயலகம் வெளிப்படுத்தியது.

ஜனாதிபதி செயலகத்தில் உள்ள அனைத்து பதவிகள், நியமனம் பெற்றவர்களின் பெயர்கள், அவர்களின் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் பிற சலுகைகள் பற்றிய விவரங்களை கோரிய அனுருத்த பண்டார தாக்கல் செய்த தகவல் உரிமை கோரிக்கைக்கு பதிலளிக்கும் விதமாக இந்தத் தகவல் வழங்கப்பட்டது. (அ)

# நெல்லுக்கு உத்தரவாத விலை!

கொழும்பு, ஜூலை 09

அரசாங்கத்தின் நெல் கொள்முதல் திட்டம் மற்றும் 2024 சிறுபோகத்திற்கான உத்தரவாத விலைகள் தொடர்பான முக்கிய விவரங்களை விவசாய பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெளிவுபடுத்தியுள்ளார்.

விவசாயிகளை ஆதரிப்பதையும் நியாயமான சந்தை நிலைமைகளை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டு, அரசாங்கம் நெல் கொள்முதலுக்கான உத்தரவாத விலைகளை ஏற்கெனவே அறிவித்துள்ளது.

குறித்த அறிவிப்பின்படி, நாடு நெல் ஒரு கிலோகிராமுக்கு 120 ரூபாவுக்கு வாங்கப்படும்

சம்பா நெல் ஒரு கிலோகிராமுக்கு 125 ரூபா.

கீரி சம்பா நெல் ஒரு கிலோகிராமுக்கு 132 ரூபா.

2025ஆம் ஆண்டு ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக, அரசாங்கம் ஈரமான நெல்லுக்கான உத்தரவாத விலைகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இது அத்தகைய திட்டத்திற்கான முதல் முறையாகும்.

ஈரமான நெல்லுக்கான உத்தரவாத விலைகள் பின்வருமாறு:


நாடு - ஒரு கிலோ கிராமுக்கு ரூ.102

சம்பா - ஒரு கிலோ கிராமுக்கு ரூ.105

கீரி சம்பா - ஒரு கிலோ கிராமுக்கு ரூ.112 என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# அதிகாரத்தை மீறிக் கொள்கலன்களை விடுவித்த சுங்க பணிப்பாளர் நாயகம்!

## முஜிபுர் ரஹ்மான் எம்.பி. தகவல்



கொழும்பு, ஜூலை 09

**சர்ச்சைக்குரிய 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையின் அறிக்கையின்படி, சுங்கத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் தனது அதிகாரங்களை மீறி கொள்கலன்களை விடுவித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-இதனுடன், தொடர்புடைய விசாரணை அறிக்கையையும் அவர் முன்வைத்தார்.

அறிக்கையின்படி, விடுவிக்கப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கை 323 அல்ல, 309 ஆகும்.

அவற்றில் 151 சிவப்பு லேபள்களின் கீழ் வழங்கப்பட்டாலும் அவற்றில் 37 முறையான விதிமுறைக்கு உட்படுத்தப்படாமல் விடுவிக்கப்பட்டன என்றும் அவர் கூறினார்.

முடிவு எடுப்பதற்கு முன்பே 2 கொள்கலன்கள் முன்கூட்டியே விடுவிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

தற்போதுள்ள சுங்கச் சட்டத்தின்படி, சிவப்பு லேபள் கொண்ட கொள்கலன்கள் சோதனை மற்றும் ஸ்கேன் ஆய்வுக்குப் பின்னரே விடுவிக்கப்படவேண்டும் என்று தொடர்புடைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

# புதையல் தோண்டிய ஐவர் கைது!

கொழும்பு, ஜூலை 09

தெனியாய, மெதெரிபிட்டியவில் உள்ள ஒரு வீட்டின் பின்னால் உள்ள ஒரு நிலத்தில் புதையல் தோண்டியதாகக் கூறப்படும் ஐந்து நபர்களும், அதற்காகப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் நேற்று கைது செய்யப்பட்டதாக தெனியாய பொலிஸார் தெரிவித்தனர்.

மெதெரிபிட்டிய, கம்புருபிட்டிய மற்றும் கொழும்பு பகுதிகளைச் சேர்ந்த 35-45 வயதுக்குட்பட்ட நபர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மெதெரிபிட்டியவில் உள்ள ஒரு வீட்டின் பின்னால் புதையல் தோண்டப்படுவதாக கிடைத்த தனிப்பட்ட தகவலின் அடிப்படையில் நேற்று அதிகாலை 12.45 மணியளவில் இந்த சோதனை நடத்தப்பட்டது.

வீட்டின் அருகே சுமார் 4 அடி ஆழத்தில் ஒரு குழி தோண்டப்பட்டு, வீட்டின் பிரதான நுழைவாயிலுக்கு முன்னால் மலர் விளக்குகளை வைத்து, விளக்குகளை ஏற்றி பூசை செய்வதைக் கண்டதாக சோதனைக்குச் சென்ற பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

முச்சக்கரவண்டி விபத்து

# இரண்டு பெண்கள் உட்பட மூவர் காயம்!

கொழும்பு, ஜூலை 09

எல்ல - வெள்ளவாய வீதியில் 03ஆவது மைல்கல் பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இரண்டு பெண்கள் உட்பட மூன்று பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முச்சக்கரவண்டி ஒன்று வீதியை விட்டு விலகி பள்ளத்தில் கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது முச்சக்கரவண்டியில் பயணித்த இரண்டு பெண்கள் உட்பட மூன்று பேர் காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# தேவாலயத்தின் மீது தாக்குதல் பூசாரி உட்பட நால்வர் காயம்!

கொழும்பு, ஜூலை 09

பதுளை, மீகஹகிவுல பிரதேசத்தில் உள்ள தேவாலயம் ஒன்றின் மீது இனந்தெரியாத நபர்கள் சிலர் கல் வீச்சு தாக்குதல் நடத்தியுள்ளதாக கந்தகெட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தாக்குதலின்போது தேவாலயத்தில் இருந்த பூசாரி, பூசாரியின் மனைவி, சிறுவன் மற்றும் பெண் ஒருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் மீகஹகிவுல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தேவாலய உரிமையாளருக்கும் அயல் வீட்டவர்களுக்கும் இடையில் நீண்ட காலமாக முரண்பாடு ஏற்பட்டு வந்துள்ள நிலையில் இதற்கு முன்னரும் பல தடவைகள் தேவாலயத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தகெட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# விவசாயிகளின் ஓய்வூதிய பிரச்னைக்கு தீர்வு கிட்டும்

கொழும்பு, ஜூலை 09

விவசாயிகளின் ஓய்வூதியம் தொடர்பான பிரச்னைகளுக்கு தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் கமநல காப்பீட்டுச் சபை தெரிவித்துள்ளது.

விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டத்துக்கு 871,425 விவசாயிகள் பங்களிப்பு செய்துள்ளனர்.

இவர்களில் 178,927 விவசாயிகள் தபால் நிலையங்கள் மூலம் தங்கள் மாதாந்திர ஓய்வூதியத்தைப் பெற முடியும்.

2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் விவசாயிகள் ஓய்வூதிய நிதியில் ஏற்பட்ட தாக்கத்தின் காரணமாக, ஓய்வூதியக் கொடுப்பனவுகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதால், அதற்குப் பங்களித்த விவசாயிகளிடமிருந்து நிலுவைத் தொகையை வசூலிக்கும் செயன்முறையும் தடைப்பட்டது.

இந்த விடயத்தில் விசேட கவனம் செலுத்துமாறு விவசாய சமூகத்தினரிடமிருந்து வந்த கோரிக்கைகளுக்கு பதிலளிக்கும் வகையில், ஓய்வூதியம் வழங்குவதில் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்கு தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த மாதம் முதல் விவசாயிகளுக்கு மாதாந்திர விவசாய ஓய்வூதியத்தை மீண்டும் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் கமநல காப்பீட்டுச் சபை தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்படுகொலை காரணமாக கனடாவில் தமிழர் சுமக்கும் வலியை உணர்கின்றேன்!

## அந்நாட்டுப் பிரதமர் மார்க் கார்னி



ஒன்ராறியோ, ஜூலை 09

**இனப்படுகொலை காரணமாக கனடாவில் வாழும் தமிழ் மக்கள் சுமக்கும் வலியை நான் புரிந்துகொள்கின்றேன் என கனடா பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.**

கடந்த மாதம் கனடா தமிழர்களுக்கும் பொதுபாதுகாப்பு அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரிக்கும் எதிராக முன்னெடுக்கப்பட்ட இனவெறி பிரசாரங்களை தொடர்ந்து கனடா பிரதமர் கனடா தமிழர்களிற்கான தனது ஆதரவை வெளியிட்டுள்ளார்.

கனேடிய தமிழர்களின் தேசிய அவைக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், தமிழ் கனடியர்கள் சுமக்கும் நீடித்த வலி மற்றும் பேரதிர்ச்சியை நான் உணர்ந்துகொள்கின்றேன் என கனடா பிரதமர் தெரிவித்துள்ளார்.

கனடா தமிழர்கள் இனப்படுகொலை காரணமாக எதிர்கொண்டுள்ள வலி, இழப்பு, பேரழிவு ஆகியவற்றை நான் புரிந்துகொள்கின்றேன் எனவும் அவர் மேலும் கூறினார். (அ)

# வைத்தியர் மகேஷிக்கு விளக்கமறியல் நீடிப்பு!



கொழும்பு, ஜூலை 09

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஜயவர்தனபுர வைத்தியசாலையின் நரம்பியல் அறுவைச் சிகிச்சை நிபுணர் வைத்தியர் மகேஷி விஜேரத் னவுக்கான விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி,

அவரை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை மேலும் விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதேநேரம், இந்த சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மேலும் இரண்டு சந்தேக நபர்களை பிணையில் விடுவிக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகள் மற்றும் பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணிகள் முன்வைத்த வாதங்களை பரிசீலித்த பின்னர் கொழும்பு தலைமை நீதிவான் தனுஜா லக்மாலி ஜெயதுங்க இந்த உத்தரவை பிறப்பித்தார்.

வைத்தியர் மகேஷி விஜேரத்ன, தான் இணைந்த தனியார் நிறுவனம் மூலம் நோயாளிகளுக்கு ரூ.50,000 பெறுதியான மருத்துவ உபகரணங்களை 175,000 ரூபாவுக்கு விற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனால், நோயாளிகளுக்கு ரூ.300 மில்லியனுக்கும் அதிகமான இழப்பு ஏற்பட்டதாகக் குற்றம் சாட்டிய இலஞ்ச ஒழிப்பு ஆணையகம், வைத்தியர் அதிகாரபூர்வ வைத்தியசாலை நடைமுறைகள் மூலம் அறுவைச் சிகிச்சை பொருட்களை வாங்காமல் பொது சேவை கொள்முதல் விதிகளை மீறியதாகக் கூறியது.

அதற்கு பதிலாக அந்தப் பொருட்கள் அவரது தனியார் நிறுவனம் மூலம் சுமார் 300 நோயாளிகளுக்கு விற்பனை செய்ததாகவும் தெரியவந்துள்ளது.

பல நாட்களாக மூளைச் சாவு அடைந்ததாக அறிவிக்கப்பட்ட நோயாளிகளுக்கு அவர் அறுவைச் சிகிச்சை செய்திருப்பதும் அண்மையில் கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த வைத்தியரும் அவரின் மருத்துவ மோசடிக்கு உதவிய அவரது இரண்டு சகாக்களும் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு வீழ்ச்சி!

கொழும்பு, ஜூலை 09

இலங்கையின் உத்தியோகப்பூர்வ வெளிநாட்டு கையிருப்பு சொத்துக்கள் 2025 ஜூன் மாதத்தில் 6.08 பில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கி இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் இந்த தொகை 6,286 பில்லியனாக இருந்தது.

அதன்படி, ஜூன் மாதத்தில் மத்திய வங்கியின் உத்தியோகப்பூர்வ கையிருப்பு சொத்துக்களின் அளவு 3.3 வீதம் அல்லது 206 மில்லியன் டொலரால் குறைந்துள்ளது. (அ)

# போதைப்பொருள் கடத்தல்கள் தொடர்பில் 30,000 வழக்குகள்!

கொழும்பு, ஜூலை 09

இலங்கையில் போதைப் பொருள் கடத்தல்களுக்கு எதிராக 30 ஆயிரத்துக்கும் அதிகமான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

இதன்படி, மொத்தம் 31 ஆயிரத்து 209 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் ஐஸ் போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் 10 ஆயிரத்து 912 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஹெரோய்ன் கடத்தல் தொடர்பில் 9 ஆயிரத்து 300 வழக்குகளும், பதிவு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது. (அ)

# இலஞ்சம் பெற முற்பட்ட குற்றச்சாட்டு இறைவரி பிரதி ஆணையாளர் கைது

கொழும்பு, ஜூலை 09

வர்த்தகர் ஒருவரிடம் 50 ஆயிரம் ரூபா இலஞ்சம் பெற முற்பட்ட குற்றச்சாட்டில் தேசிய இறைவரித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

பிலியந்தலை பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைய தேசிய இறைவரித்திணைக்களத்தில் வைத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 50 ஆயிரம் ரூபா இலஞ்சம் பெற முற்பட்ட குற்றச்சாட்டிலே அந்த பிரதி ஆணையாளர் கைது செய்யப்பட்டார்.

கொழும்பு தெமட்டகொட, கொலன்னாவை பிரதேசத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் குறித்த வர்த்தகர்கருக்கு சொந்தமான நிறுவனத்துக்கான வருடாந்த பரிசோதனை அறிக்கையை வெளியிடுவதற்காக 50 ஆயிரம் ரூபாவை கோரியுள்ள சந்தேக நபர், அதில் 42 ஆயிரம் ரூபாவை கடந்த 3 ஆம் திகதி இலஞ்சமாக பெற்றுக்கொண்டுள்ளமை தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பொலிஸ் சீருடையில் வரும் கொள்ளையர்!

கொழும்பு, ஜூலை 09

போலியான பொலிஸ் சீருடைகள் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படை சீருடைகளை அணிந்து வீடொன்றில் கொள்ளையில் ஈடுபட்ட மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொள்ளையர்கள் குறித்த வீட்டுக்கு சென்று, அங்கு சோதனையிடுவதாக கூறி வீட்டினுள் நுழைவது அங்கிருந்த சி.சி.ரி.வியில் பதிவாகியிருந்தது.

இதன்போது, பிரதேசவாசிகள் குறித்த சந்தேக நபர்கள் வந்த வானை சுற்றி வளைத்த நிலையில், கொள்ளையர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக கல்னேவ பொலிஸார் நடத்திய விசாரணையில், சந்தேக நபர்கள் வந்த வானுடன் ஒரு பெண் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டனர். (அ)

# சிறுவனின் உயிரை பறித்த ரம்புட்டான்!

கொழும்பு, ஜூலை 09

அம்பாந்தோட்டை - மித்தெனிய, பல்லேயில் உள்ள ஜூலம்பிட்டிய பகுதியில் ரம்புட்டான் விதை சிக்கி ஐந்து வயது சிறுவன் ஒருவன் நேற்று முன் தினம் உயிரிழந்தான்.

வலஸ்முல்ல ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிறுவன் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித் தனர்.

சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# இந்திய ஒப்பந்தங்கள் மறைக்கப்படுவது ஏன்?

## விமல் வீரவன்ஸ கேள்வி



கொழும்பு, ஜூலை 09

பாதுகாப்பு உட்பட இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட ஏழு ஒப்பந்தங்களை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மறைத்து வைத்திருப்பது ஏன்? இந்தியாவின் அனுமதியின்றி இவற்றை பகிரங்கப்படுத்த முடியாது என அரசாங்கம் கூறுவது அதன் கையாலாத்தனத்தையே வெளிப்படுத்துகின்றது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

அமெரிக்காவின் தாளத்துக்கேற்ப செயற்பட்ட ஜே.ஆர். ஜயவர்தனகூட 1988 இல் இந்தியாவுடன் கைச்சாத்திட்டப்பட்ட ஒப்பந்தத்தை வெளியிட்டார்.

ஜே.ஆரின் மருமகனான ரணில் விக்கிரமசிங்க புலிகளுடன் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திட்டார். அந்த உடன்படிக்கைகூட பகிரங்கப்படுத்தப்பட்டது.

ஆனால் தேசிய மக்கள் சக்தியினர், இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். இந்திய பிரதமர் இலங்கைவந்தபோது ஏழு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. அவை இன்னும் பகிரங்கப்படுத்தப்படவில்லை.

எதற்காக ஒப்பந்தங்கள் மறைக்கப்படுகின்றன? அவை நாட்டுக்கு பாதுகாப்பில்லை. இரு நாடுகளுக்கும் நன்மை பயக்கும் ஒப்பந்தங்கள் எனில் எதற்காக ஒளித்துவைக்கப்பட்டுள்ளன? நாட்டுக்கு பாதகம் என்பதால்தான் அவை இன்னும் பகிரங்கப்படுத்தப்படாமல் உள்ளது-என்றார். (அ)

# வாகன இறக்குமதியை கட்டுப்படுத்த எந்தவித முடிவும் எடுக்கப்படவில்லை

## இலங்கை மத்திய வங்கி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 09

நாட்டின் வாகன இறக்குமதியைக் கட்டுப்படுத்த எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

சில ஊடக அறிக்கைகளை மறுத்துள்ள மத்திய வங்கி இந்த விடயத்தை தெளிவுபடுத்தியுள்ளது.

அந்தவகையில், வாகன இறக்குமதியைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக மத்திய வங்கிக்கும், திறைசேரிக்கும் இடையில் கடிதப் பரிமாற்றம் எதுவும் இடம்பெறவில்லை என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

நாட்டின் வணிக வங்கி அமைப்பில் கிடைக்கும் டொலர் இருப்புகளிலிருந்தே, வாகன இறக்குமதிகள் செய்யப்படுகின்றன.

எனவே, வாகன இறக்குமதியின்போது, வெளிநாட்டு இருப்புக்களைப் பாதிக்காது என்றும் மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2027ஆம் ஆண்டு முதல் சொத்து வரி அறிமுகம்

## சர்வதேச நாணய நிதியம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 09

**2027 ஆம் ஆண்டு முதல் சொத்து வரி ஒன்றை அறிமுகப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.இந்த வரி முறை 2027 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.**

சர்வதேச நாணய நிதியம் சமீபத்தில் இலங்கை தொடர்பாக வெளியிட்ட தனது ஊழியர் மட்ட அறிக்கையில் இது குறித்து அறிவித்துள்ளது.

இந்த புதிய சொத்து வரியை விதிப்பதற்குத் தேவையான அடிப்படை நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், தரவு சேகரிப்பு பணிகளில் சிறிது தாமதம் இருந்த போதிலும், செப்டம்பர் மாதத்திற்குள் அந்தப் பணிகள் முடிவடையும் என சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டுகிறது.

சொத்துக்களின் மதிப்பை மதிப்பீடு செய்வதற்கும் வரி கணக்கிடுவதற்கும் டிஜிற்றல் தரவு முறைமை ஒன்று உருவாக்கப்படவுள்ளதுடன், 2026 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் அதற்கு தேவையான அனைத்து தரவுகளும் தயாரிக்கப்படவேண்டும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2027 ஆம் ஆண்டில் இந்த புதிய வரியை அமுல்படுத்துவதற்கு சொத்து வரி விதிப்பு முறைகள் குறித்து ஒருங்கிணைந்த கலந்துரையாடல்கள் அவசியம் என சர்வதேச நாணய நிதியம் மேலும் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், டிஜிற்றல் சேவைகளுக்கு ஒக்ரோபர் 12 ஆம் திகதி முதல் 18 வீத பெறுமதி சேர் வரி விதிக்கப்பட்டுள்ளதாக வெளியாகும் அறிக்கைகள் உண்மையற்றவை என தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.




அந்த வரி விதிப்பு 2025 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட ஒரு யோசனையாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் மாதம் முதல் திகதி முதல் அமுலுக்கு வரவிருந்த அந்த வரி விதிப்பு ஒக்ரோபர் மாதம் முதல் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பேராசிரியர் அனில் ஜயந்த குறிப்பிட்டார்.

(அ)

# 5,000 பொலிஸாரை உடனடியாக ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 09

பொலிஸ்துறையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்ப 5,000 பொலிஸாரை உடனடியாக ஆட்சேர்ப்பு செய்யும் பணி விரைவில் தொடங்கும் என்று பொது பாதுகாப்பு அமைச்சர் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற அமர்வில் நேற்றுக் காலை கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

இதன்போது மேலும் பேசிய அமைச்சர், இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாகவும், தற்போது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

தற்போது பொலிஸ்துறையில் சுமார் 28,000 காலியிடங்கள் உள்ளன.இதனால் சுமார் 1,500 உயர்தர அதிகாரிகள் உட்பட 5,000 பொலிஸாருக்கு பதவி உயர்வு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் இதன் போது சுட்டிக்காட்டினார்.(அ)

# தாதியர்களின் கட்டாய ஓய்வு வயதை 60 ஆகக் குறைப்பதால் பல சிக்கல்கள்

கொழும்பு, ஜூலை 09

தாதியர்களின் கட்டாய ஓய்வு வயதை 60 ஆகக் குறைப்பதால் எதிர்காலத்தில் பல சிக்கல்கள் ஏற்படக்கூடும் என்று அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது.

ஓய்வூதிய வயதை குறைப்பதால் தற்போதுள்ள தாதியர் பற்றாக்குறை மேலும் மோசமடையும் என்று அதன் தலைவர் வணக்கத்திற்குரிய முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

தாதியர் அதிகாரிகளின் கட்டாய ஓய்வு வயதை 63 ஆக நீடித்த மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து சுகாதார அமைச்சு உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது.

அதன்படி, குறித்த வழக்கு முடியும் வரை மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை நிறுத்தி வைக்க உயர் நீதிமன்றம் மார்ச் 6 ஆம் திகதி உத்தரவிட்டது.

அந்த உத்தரவின்படி, 60 வயதை நிறைவு செய்த அனைத்து தாதியர் அதிகாரிகளும் ஓய்வு பெற வேண்டும் என்று சுகாதார அமைச்சின் செயலாளரால் கடந்த 4 ஆம் திகதி சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சந்திரசேனவுக்கு வெளியிலிருந்து உணவுகள் கொண்டுவர முடியாது

## சிறைச்சாலை உயர் அதிகாரி

கொழும்பு, ஜூலை 09

சிறைச்சாலையில் உள்ள முன்னாள் எஸ்.எம்.சந்திரசேனவுக்கு வெளியிலிருந்து உணவுகளை கொண்டுவரமுடியாது என சிறைச்சாலை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

2015 ஜனாதிபதி தேர்தலின் போது தனது அன்புக்குரியவர்களுக்கு 25 மில்லியன் ரூபா பெறுமதியான சோளங்களை வழங்கியமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் எஸ்.எம் சந்திரசேன, இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்ட நிலையில் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில், சிறைச்சாலையில் இருக்கும் வரை எஸ்.எம் சந்திரசேனவுக்கு வெளியிலி ருந்து உணவுகளை கொண்டு வர அனு மதி வழங்குமாறு சிறைச்சாலை உயர் அதிகாரியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எஸ்.எம் சந்திரசேனவின் உடல்நிலை நலமாக இருப்பதால் அவருக்கு வெளியிலிருந்து உணவுகளை கொண்டு வர முடியாது என சிறைச்சாலை உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

# ஹர்ஷன சூரியப்பெருமவின் இடத்துக்கு நிஷாந்த ஜயவீர!

கொழும்பு, ஜூலை 09

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெருமவின் இராஜினாமாவைத் தொடர்ந்து ஏற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடத்தை நிரப்ப நிஷாந்த ஜயவீரவின் பெயர் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழு இந்த வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் செயலாளர் இந்தப் பெயரை தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பியுள்ளார்.

அதன்படி, வெற்றிடமாக உள்ள பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு நிஷாந்த ஜயவீரவின் பெயர் வெளியிடப்பட்டுள்ளது.

கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சராகப் பணியாற்றினார்.

பின்னர் தனது பதவியிலிருந்தும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் இராஜினாமா செய்தார்.

நிதி அமைச்சின் செயலாளர் பதவியை ஏற்றுக்கொள்வதற்காக அவர் இவ்வாறு இராஜினாமா செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# மொழி உரிமை சட்ட அங்கீகாரம் மட்டுமல்ல வாழ்க்கையில் யதார்த்தமாக மாறவேண்டும்

## அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார




கொழும்பு, ஜூலை 09

எமது நாட்டில் மொழி உரிமைக்கு மதிப்பளிப்பதற்கு முடியாமல்போனமை சிறிய தவறு அல்ல என்பதை நாங்கள் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

இந்த படிப்பினையை சரியாக கற்றுக்கொள்ளா விட்டால் வரலாறு மீண்டும் வருவது நிச்சயமாகும். அதனால் மொழி உரிமைகள் தொடர்பாக சட்ட அங்கீகாரம் மட்டும் போதாது. ஏட்டில் உள்ள உரி மைகள் மக்களின் வாழ்க்கை யில் யதார்த்தமாக மாற வேண் டும் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

அரச கரும மொழிகள் வாரத்தின் இறுதிநாள் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை (7) இலங்கை மன்ற கல்லூரியில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்-மொழி என்பது ஒரு தொழில்நுட்ப விடயம் அல்ல என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். அதேபோன்று தொடர்பு சாதனத்தை விட அதிகமான தெளிவை மொழி மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது.

மொழி என்பது ஒரு நபரின் அடையாளத்தின் இத யம். அது நினைவின் குரலும் கூட. மரியாதையின் தாளம். சிந்தனையின் கட்டமைப்பு. எமது நாட்டை உற்றுநோக்கும் போது நீதி நல்லிணக்கம் மற்றும் அரசின் தூய்மை தன்மையின் லிட்மஸ் பரிசோதனையாக மொழியை அறிமுகப்படுத்தலாம்.

ஒருவருக்கு தனக்கு நெருக்கமான மொழியில் கருத்து தெரிவிக்க அல்லது செவிசாய்ப்பதற்கு இருக்கும் சந்தர்ப்பம் இல்லை என்றால், அந்த சமூகத்தில் மனிதாபி மானம் நிராகரிக்கப்படுகிறது என்றே அதன் மூலம் தெரிகிறது.

அதனாலே அடிப்படை தேவைகளை பெற் றுக்கொடுப்பதன் மூலம் அல்லது போராட்ட கோஷங்கள் ஊடாக மாத்திரம் தேசிய ஒரு மைப்பாட்டை உறுதிப்படுத்த முடியாமல் இருக்கிறது. மொழிக்கொள்கையை செயற்படுத்துவதன் மூலமே இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் ஏற்ப டுகிறது.

எமது வரலாற்றை திரும்பிப் பார்ப்போமானால், மொழி உரிமைக்கு மதிப்பளிப்பதற்கு முடியாமல்போனமை சிறிய தவறு அல்ல என்பதை நாங்கள் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

அது பாரிய அநீதியை ஏற்படுத்தியது மட்டுமல்லாது, இனங்களுக்கிடையில் நம்பிக்கையின்மை, ஐக்கியமின்மை மற்றும் இறுதியில் ஆயுதம் தாங்கிய மோதலுக்கு செல்வதற்கும் காரணமாயது. இந்த படிப்பினையை சரியாக கற்றுக்கொள்ளாவிட்டால் வரலாறு மீண்டும் வருவது நிச்சயமாகும். அதனால் அதனை நாங் கள் மீண்டும் செய்யக்கூடாத சிறந்த பாடமாக, ஆழமாக புரிந்துகொள்ள வேண்டும்.

சமத்துவம் இல்லாமல் நீடித்த அமைதி இருக்கமுடியாது. அரசு தனது மக்களின் மொழியை மதிக்காவிட்டால் சமத்துவம் ஏற்படப்போவதில்லை.

நாங்கள் அதனை புரிந்து கொண்டு தேவையான நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறோம். எதிர் வரும் ஒக்ரோபர் மாதத்தில் இருந்து அனைத்து கிராம சேவகர் பிரிவிலும் இரண்டு மொழிகளிலும் விண்ணப் பங்களை விநியோகிப்பதற்கு திட்டமிட்டுள்ளோம்.

இலங்கை அரசியலமைப்பில் சிங்களம் மற்றும் தமிழ் அரசகரும மொழியாகவும் ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 13ஆம் திருத்தம் மற்றும் அரசகரும மொழிகள் ஆணைக்குழு சட்டத்தின் மூலம் பலமான தொரு சட்ட ஏற்பாடு ஒன்றை தயாரித்திருக்கிறோம். எவ் வாறு இருந்தாலும், மொழி உரி மைகள் தொடர்பாக சட்ட அங்கீகாரம் மட்டும் போதாது. ஏட்டில் உள்ள உரிமைகள் மக்களின் வாழ்க்கையில் யதார்த்தமாக மாறவேண்டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலை, ஆட்கடத்தல் விவகாரம் இனிய பாரதியின் சாரதி கைது!

கல்முனை, ஜூலை 09

**கருணா - பிள்ளையான் அணியின் முக்கியஸ்தராக கருதப்படும் "இனிய பாரதி" என்று அழைக்கப்படும் கே. புஷ்பகுமாரின் வாகனச் சாரதியாக செயல்பட்ட ஒருவரை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் கைது செய்தனர்.**

இந்தக் கைது நடவடிக்கை யானது அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதான பஸ் நிலையத்துக்கு அருகில் இடம் பெற்றது. 34 வயதுடைய செழியன் என அழைக்கப்படும் அழகரட்ணம் யுவராஜ் என்பவரே இவ்வாறு கைதானவர் ஆவார்.

கைதானவர் கடந்த 2007, 2008, 2009 காலப்பகுதியில் இனிய பாரதியின் சாரதியாக செயல்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

அத்துடன் தற்போது அவர் பொத்துவில் - மட்டக்களப்பு வழித்தட பஸ் சாரதியாக செயல்பட்டு வந்துள்ளார்.

இந்த நிலையில், பொத்துவில் பகுதியிலிருந்து வழமை போன்று கல்முனை ஊடாக மட்டக்களப்புக்கு செல்லும் போது கல்முனை பிரதான பஸ் நிலையத்துக்கு அருகில் காத்திருந்த குற்றப்புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் அவரைக் கைது செய்ததுடன் அம்பாறைக்கு மேலதிக விசாரணைக்காக கொண்டு சென்றனர்.

இதேவேளை கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் யுத்த காலத்தில் கருணா அணியின் அம்பாறை மற்றும் திருக்கோவில் பகுதிக்கு பொறுப்பாக இருந்தவருமான இனிய பாரதி என்று அழைக்கப்படும் கே. புஷ்பகுமார் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு விசாரணை வலயத்துக்குள் கொண்டுவரப்பட்டுள்ளார்.

அத்துடன் இனிய பாரதியின் சகாவான சிவலிங்கம் தவசீலன் என்பவர் மட்டக்களப்பு சந்திவெளி பகுதியில் வைத்து கைதானார். இவர்கள் இருவரும் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றப் புலனாய்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

இந்தக் கைது நடவடிக்கை யானது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த 3 மாதங்களாக விசாரணை செய்யப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான (பிள்ளையான்) சிவநேசதுரை சந்திரகாந்தனால் வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைவாகவும், 2005 முதல் 2009 ஆம் ஆண்டு வரை இடம்பெற்ற கொலை, ஆட்கடத்தல் உள்ளிட்ட பல திட்டமிடப்பட்ட குற்றங்களுக்காகவும் இடம்பெற்றது. (எ-01)



## தேசிய காயங்கள் தடுப்பு வார வீதி பாதுகாப்பு விழிப்புணர்வு

காரைதீவு , ஜூலை 09

2025 ஆம் ஆண்டு தேசிய காயங்கள் தடுப்பு வாரத்தை முன்னிட்டு "வீதி பாதுகாப்பு தினம்" எனும் கருப்பொருளின் கீழ் விழிப்புணர்வு நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸதீனின் ஆலோசனைக்கு அமைய காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி தஸ்லிமா வசீர் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், பொலிஸ் திணைக்களமும் இணைந்து, விசேட விழிப்புணர்வு நடவடிக்கையை காரைதீவு பிரதேசத்தில் ஏற்பாடு செய்திருந்தன.

இந்த நிகழ்வின் போது, சுகாதார உத்தியோகத்தர்களும்பொலிஸ் அதிகாரிகளும் இணைந்து, அதிவேகமாக செலுத்தப்பட்ட வாகனங்கள், வீதிப்போக்குவரத்து சட்டங்களை மீறி இயக்கப்பட்ட வாகனங்கள், தலைக்கவசமின்றி மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தவர்கள், வாகனம் செலுத்தும் போது தொலைபேசியைப் பயன்படுத்திய சாரதிகளைத் தடுத்து நிறுத்தி, அவர்களுக்குப் போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான விழிப்புணர்வும் ஆலோசனைகளும் வழங்கினர். (எ-01)



## உகந்தைமலை முருகன் ஆலய ஆடிவேல் விழா மஹோற்சவம்

### 25இல் கொடியேற்றத்துடன் ஆரம்பம்

பொத்துவில், ஜூலை 09

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தைமலை முருகன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இம் மாதம் 25ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது என்று ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸநாயக்க சுதா தெரிவித்தார்.

உகந்தை மலை சிறீ முருகன் ஆலய கொடியேற்றம் இம் மாதம் 25 ஆம் திகதி ஆலய பிரதம குரு சிவசிறீ க. கு. சீதாராம் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

கொடியேற்றம் தொடங்கி தொடர்ச்சியாக16 நாட்கள் திரு விழா நடைபெற்று எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி சமுத்திரத்தில் தீர்த்த உற்சவம் நடைபெறவுள்ளது.

உற்சவ காலங்களில் போக்குவரத்து மற்றும் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-08)

## சிறு தொழில் முயற்சியாளர்கள் அபிவிருத்திக் குழு உருவாக்கம்

திருகோணமலை, ஜூலை 09

திருகோணமலை மாவட்டத்தின் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் மாவட்ட தொழில் முயற்சியாளர்கள் அபிவிருத்திக் குழுவை நிறுவும் விசேட கூட்டம் நேற்று முன்தினம். திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன மற்றும் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் எம். ஹேமந்த குமார ஆகியோரின் தலைமையில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது, நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த, உற்பத்திப் பொருளாதாரத்தை நோக்கிச் செல்ல வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன கூறினார்.

உள்ளூரில் பொருட்களை விற்பனை செய்யும் தொழில் முயற்சியாளர்கள், ஏற்றுமதி தொழில் முயற்சியாளர்களாக வளர வேண்டும். பிராந்திய ரீதியாக பொருட்களை விற்பனை செய்யும் தொழில் முயற்சியாளர்கள் தங்கள் தற்போதைய மட்டத்திலிருந்து தேசிய மட்டத்துக்கு ஒரு படி முன்னேற வேண்டும் என்றும் அக்மீமன எம். பி. கூறினார்.

மாவட்டத்தின் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் சிக்கல்களை தீர்த்து வைத்தல், மாவட்டத்தின் தொழில் முயற்சி சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்களின் சேவைகளை ஒன்றிணைப்பதன் ஊடாக மிகவும் பரந்த மற்றும் வினைத்திறனான சேவைத் தொகுதியொன்றை ஸ்தாபித்தல், சந்தைப் பிரச்னைகளைத் தீர்ப்பது, முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்துவது, புதிய தொழில் முயற்சியாளரை ஊக்குவித்தல், ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு பொது மற்றும் தனியார் நிறுவனங்களின் அதிகாரிகளை ஈடுபடுத்துவதன் மூலம் இந்தக் குழு உருவாக்கப்பட்டது. (எ)

## மட்டக்களப்பில் ரயிலில் மோதி 23 வயது இளைஞன் உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஜூலை 09

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கறுவப்பங்கேணியில் நேற்று அதிகாலை ரயிலில் மோதி 23 வயது இளைஞன் உயிரிழந்தார்.

நேற்று அதிகாலை 01.30 மணிக்கு மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயிலில் மோதுண்டு கறுவப்பங்கேணி, அரோஸ் வீதியை சேர்ந்த எஸ். நிஷாந்தன் என்னும் 23 வயதுடைய இளைஞனே உயிரிழந்தார்.

ரயில் கடவையில் தொலைபேசியில் உரையாடிக்கொண்டிருந்தவரே இவ்வாறு ரயிலில் மோதி உயிரிழந்ததாக பிரதேச மக்கள் தெரிவித்தனர். (எ)



## ஆளுநரின் மக்கள் சந்திப்பு

மட்டக்களப்பு, ஜூலை 09

கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகரவிடம் முன்வைக்கப்பட்ட பொதுமக்கள் பிரச்னைகளுக்கான தீர்வுச் செயல் முறையை விரைவுபடுத்தும் நோக்கில் பொதுமக்கள் தினம் நேற்று மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் திருமதி ஜே. ஜே. முரளிதரன், கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஜே. எஸ். அருள்ராஜ், கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் பொறுப்பான நிறுவனங்களின் தலைவர்கள் இதில் பங்கேற்றனர். இங்கு, பொதுமக்கள் தங்கள் பிரச்னைகளை பொறுப்பான அதிகாரிகளிடம் முன்வைக்க வாய்ப்பு வழங்கப்பட்டது, மேலும் ஆளுநரிடமும் பிரச்னைகளை முன்வைக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது. (எ)

## பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி

கல்முனை, ஜூலை 09

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் அம்பாறை மாவட்ட செயலக நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையால் பாடசாலை மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் அம்பாறை மாவட்டம் கல்முனை பஹ்ரியா பாடசாலையில் விசேட நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

இதன்போது நுகர்வோர் உரிமைகள், பொறுப்புகள், சட்டங்கள், பாதுகாப்பு மற்றும் பொருட்கள் சேவைகளின் போது கவனிக்க வேண்டிய முக்கியமான விடயங்கள் மற்றும் தற்போதைய சந்தையில் பொருட்களின் அரசாங்க கட்டுப்பாட்டு விலை மற்றும் அதிகார சபையின் சட்டதிட்டங்கள் சம்மந்தமாக மாணவர்களுக்கு விளக்கக்காட்சி ஊடாக தெளிவுபடுத்தப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### ரஷ்யாவுக்கு எதிரான போர்

# உக்ரைனுக்கு ஆயுதங்கள் வழங்க அமெரிக்கா முடிவு

வாஷிங்டன், ஜூலை 09

**ரஷ்யாவுக்கு எதிரான போரில் ஈடுபட்டு வரும் உக்ரைனுக்கு கூடுதல் ஆயுதங்களை வழங்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது.**

இதேவேளை, விளாடிமிர் புடினின் செயல்பாடுகளால் நான் மகிழ்ச்சியற்று இருக்கிறேன் என்று செய்தியாளர்கள் சந்திப்பின்போது, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறினார்.

உக்ரைனுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் ரஷ்யா கடந்த 2022ஆம் ஆண்டு போர் தொடுத்தது. தொடக்கத்தில் முக்கிய நகரங்களை ரஷ்யா கைப்பற்றியது. ஆனால், அவற்றை உக்ரைன் மீட்டது. இந்த நிலையில், ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையேயான போரானது 3 ஆண்டுகளை கடந்தும் நீடிக்கிறது.

உக்ரைனுக்கு அமெரிக்கா, ஜேர்மனி உள்ளிட்ட நாடுகள் ஆயுத மற்றும் நிதி உதவியை வழங்கி வருகின்றன. ரஷ்யாவுக்கு, வடகொரியா இராணுவ தளவாடங்கள் மற்றும் வீரர்களை அனுப்பி ஆதரவாக இருந்து வருகிறது.

போரால் ஆயிரக்கணக்கானோர் பலியாகினர். இலட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில், போரை முடிவுக்கு கொண்டு வரும் மத்தியஸ்த பேச்சுக்களில் அமெரிக்கா ஈடுபட்டது. இதற்காக ரஷ்ய ஜனாதிபதி புடினுடன், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பேச்சுக்கள் நடத்தினார்.

எனினும், உக்ரைனுக்கு எதிரான போரை ரஷ்யா நிறுத்தவில்லை. ஆனால், சமீபத்தில் சிக்கன நடவடிக்கையாக உக்ரைனுக்கான ஆயுத உதவியை அமெரிக்கா நிறுத்தியது. இதேபோன்று, உளவு தகவலையும் நிறுத்தியது. இந்தச் சூழலில், ரஷ்யா உக்ரைனை கடுமையாக தாக்கியது. இதனால் ஜேர்மனி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளிடம் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி உதவி கோரினார்.

உக்ரைனுக்கான ஆயுத விநியோகம் நிறுத்தம் பற்றிய அமெரிக்காவின் அறிவிப்பு வெளியான சூழலில், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் வெள்ளை மாளிகையில் செய்தியாளர்கள் சந்திப்பை நடத்தி பேசினார். அப்போது அவர், நாங்கள் உக்ரைனுக்கு கூடுதல் ஆயுதங்களை வழங்க முடிவு செய்திருக்கிறோம். அதுவும் முதல்கட்டத்தில் தற்காப்புக்கான ஆயுதங்கள் வழங்கப்படும் எனக் கூறினார்.

உக்ரைன் மிக மிக கடுமையாக தாக்கப்பட்டு வருகிறது. விளாடிமிர் புடினின் செயல்பாடுகளால் நான் மகிழ்ச்சியற்று இருக்கிறேன் என்றும் கூறியுள்ளார். இதனால், ரஷ்யாவுக்கு எதிரான போரை உக்ரைன் இன்னும் தீவிரப்படுத்தக் கூடும் என பார்க்கப்படுகிறது. இது மீண்டும் உலகளாவிய அளவில் தாக்கம் ஏற்படுத்தும் என்றும் கூறப்படுகிறது.

போரால் எரிபொருள் தட்டுப்பாடு, அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையுயர்வு உள்ளிட்ட தாக்கங்கள் ஏற்பட்டன. இதனால், உலகில் வளர்ந்து வரும் நாடுகள் உட்பட பல்வேறு நாடுகளும் கடுமையாக பாதிக்கப்பட்டன. இந்த நிலையில், போரானது முடிவுக்கு வராமல் உள்ளது. இந்தச் சூழலில், அமெரிக்காவின் இந்த அறிவிப்பு போரை தீவிரப்படுத்த கூடிய ஒன்றாகவே உலக நாடுகளால் பார்க்கப்படுகிறது.

(எ)

# இந்தியாவின் தலைமையில் பருவநிலை மாற்ற மாநாடு!

### பிரிக்ஸ் கூட்டறிக்கை வெளியீடு

ரியோடி ஜெனீரோ, ஜூலை 09

33ஆவது பருவநிலை மாற்ற மாநாட்டை இந்தியா தலைமையேற்று நடத்தும் என்று பிரிக்ஸ் கூட்டறிக்கை வெளியிட்டுள்ளது.

பிரேசிலின் பெலம் நகரில் நடைபெற கூடிய, இந்த ஆண்டுக்கான ஐ.நாவின் பருவநிலை மாற்ற கட்டமைப்பு உடன்படிக்கைக்கான தலைமைக்கு நாம் முழு ஒத்துழைப்பையும் அளிப்போம் என தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்று, 2028ஆம் ஆண்டுக்கான 33ஆவது பருவநிலை மாற்ற மாநாட்டை இந்தியா ஏற்று நடத்தும் என இந்த மாநாட்டில் அறிவிக்கப்பட்டது. அதனை நாங்கள் வரவேற்கிறோம் என பிரிக்ஸ் நாடுகளின் தலைவர்கள் தெரிவித்தனர்.

இதன்படி, ஐ. நாவின் பருவநிலை மாற்ற கட்டமைப்பு உடன்படிக்கைக்கான 33ஆவது பருவநிலை மாற்ற மாநாட்டை இந்தியா தலைமையேற்று நடத்தவுள்ளது.

(எ)

# அமெரிக்காவில் பேரிடர் இதுவரை 81 பேர் மரணம்

வாஷிங்டன், ஜூலை 09

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் ஏற்பட்ட பெருவெள்ளப்பெருக்கில் சிக்கி இதுவரை 81 பேர் உயிரிழந்தனர்.

டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள வனப்பகுதியையொட்டி மலைப்பிரதேசமான கெர் கவுன்டியில் திடீரென கனமழை பெய்தது. சுமார் 3 மணிநேரம் கொட்டி தீர்த்த இந்த மழை காரணமாக அங்குள்ள குவாடலூப் ஆற்றின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்தது. இதன் காரணமாக ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

இந்த கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கில் சிக்கி 51 பேர் பலியாகினர். வெள்ளம் ஏற்பட்ட வனப்பகுதி ஆற்றங்கரையோரம் கோடைகால முகாம் அமைத்து தங்கியிருந்த சிறுமிகள் 25 பேர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர். இந்த நிலையில் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்ட சிறுமிகள் உள்ளிட்டோரின் உடல்கள் கரையொதுங்கின. இதனால் டெக்சாஸ் வெள்ளத்தில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கை 81 ஆக அதிகரித்தது.

(எ)



# சூரினாம் நாட்டின் முதல் பெண் ஜனாதிபதியாக ஜெனிபர் தெரிவு

பராமரிபோ, ஜூலை 09

சூரினாம் நாட்டின் முதல் பெண் ஜனாதிபதியாக ஜெனிபர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தென் அமெரிக்காவில் உள்ள கடலோர நாடாக சூரினாம் உள்ளது. டச்சுக்காரர்கள் ஆட்சி - அதிகாரத்தின் கீழ் இருந்த இந்த நாடு 1975ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது. முன்னதாக தமிழ்நாடு, பஞ்சாப் உள்ளிட்ட இந்தியாவின் மாநிலங்களிலிருந்து பலர் அங்கு தோட்ட வேலைக்காக அடிமைகளாக கடத்திச் செல்லப்பட்டனர். தொடர்ந்து அங்கேயே அவர்கள் குடியேறி தற்போது அதிகளவில் வசித்து வருகின்றனர்.

சூரினாம் நாட்டின் ஜனாதிபதியாக இருந்த சான் சந்தோகியின் பதவிக்காலம் முடிந்தநிலையில் அங்கு புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெற்றது. இதில் ஆளுங்கட்சி சார்பில் ஜெனிபர் கிர்லிங்க்ஸ் -சிமோன்ஸ் போட்டியிட்டார். தேர்தலில் பெரும்பான்மையான வாக்குகளை அவர் பெற்று வெற்றிபெற்றார். இதனால் அந்த நாட்டின் முதல் பெண் ஜனாதிபதியாக ஜெனிபர் தெரிவாகியுள்ளார். எதிர்வரும் 19ஆம் திகதி ஜெனிபர், ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ளார்.

(எ)

# போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் துப்பாக்கி சூடு

### 11 பேர் உயிரிழப்பு, பலர் படுகாயம்

நைரோபி, ஜூலை 09

கென்யாவில் போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூடு தாக்குதலில் 11 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர்.

கிழக்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள நாடு கென்யா. இந்த நாட்டில் சர்வாதிகாரியாக இருந்த ஜனாதிபதி டானியல் அரப் மொய்க்கு எதிராக 1990ஆம் ஆண்டு ஜூலை 7ஆம் திகதி மக்கள் போராட்டம் வெடித்தது. இதன்பின்னர் டானியல் ஆட்சி முடிவுக்கு வந்து கென்யாவில் ஜனநாயக ஆட்சிக்கான முயற்சிகள் தொடங்கின.

இந்த நிலையில், கென்யாவில் மக்கள் புரட்சி வெடித்து நேற்று முன்தினத்துடன் 35 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் அதன் நினைவாக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



தற்போது ஜனாதிபதியாகவுள்ள வில்லியல் ருடோவை இராஜினாமா செய்யக்கோரி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டக்காரர்களை கட்டுப்படுத்த பொலிஸார் தடியடி நடத்தினர். அப்போது, பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களும் இடையே மோதல் வெடித்தது. இதனைத் தொடர்ந்து போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்தத் துப்பாக்கிச் சூட்டில் போராட்டக்காரர்கள் 11 பேர் உயிரிழந்தனர். 52 பொலிஸார் காயமடைந்தனர். வன்முறையைக் கட்டுப்படுத்த தலைநகர் உட்பட பல்வேறு பகுதிகளில் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

(எ)

# தலாய் லாமாவுக்கு பாரத ரத்னா விருது

புதுடில்லி, ஜூலை 09

திபெத் பௌத்த மதத் தலைவர் தலாய் லாமாவுக்கு பாரத ரத்னா விருது வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அனைத்துக் கட்சி எம்.பிக்கள் இந்திய மத்திய அரசுக்கு கடிதம் எழுதவுள்ளதாக தெரிவித்தனர்.

பா.ஜ.க., பிஜூ ஜனதா தளம், ஐக்கிய ஜனதா தளம் உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய திபெத்துக்கான அனைத்துக் கட்சி இந்திய பாராளுமன்ற அமைப்பு இந்த மாதம் நடைபெற்ற அதன் இரண்டாவது கூட்டத்தின்போது இத்தகைய விருது வழங்கும் பரிந்துரையை தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது.

இந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளரும், பிஜூ ஜனதாதளம் மாநிலங்களவை எம்.பியுமான சுஜீத் குமார் தலைமையிலான 10 பேர் கொண்ட குழு, தலாய் லாமாவுக்கு பாரத ரத்னா விருது வழங்கும் பரிந்துரையை ஆதரிக்கும் கையெழுத்து பிரசாரத்தை தொடங்கியுள்ளது.



இது குறித்து சுஜீத் குமார் கூறும்போது, "திபெத்திய மக்களின் நலனுக்கான வலுவான ஆதரவை வெளிப்படுத்தும் விதமாக, ஜூலை 6ஆம் திகதி தனது 90ஆவது பிறந்தநாளை கொண்டாடிய தலாய் லாமாவுக்கு பாரத ரத்னா விருது வழங்குவதற்காக கையெழுத்து பிரசாரத்தை நாங்கள் தொடங்கியுள்ளோம்"- என்றார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்க கிண்ண உதைபந்தாட்டம்

# அமெரிக்காவை வீழ்த்தி மெக்சிக்கோ சம்பியன்

ஹூஸ்டன், ஜூலை 09

தங்கக் கிண்ண உதைபந்தாட்ட போட்டியில் அமெரிக்காவை வீழ்த்தி மெக்சிக்கோ அணி சம்பியனானது.

வடக்கு, மத்திய அமெரிக்கா மற்றும் கரீபியன் மண்டல அணிகளுக்கு இடையிலான 18ஆவது தங்கக் கிண்ண உதைபந்தாட்ட போட்டி அமெரிக்காவில் நடைபெற்றது. இதில் ஹூஸ்டனில் இலங்கை நேரப்படி நேற்று முன்தினம் அதிகாலை நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் முன்னாள் சம்பியனான அமெரிக்கா- நடப்பு சம்பியன் மெக்சிக்கோ அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் அமெரிக்க வீரர் கிறிஸ் எட்வர்ட்ஸ் 4ஆவது நிமிடத்தில் தலையால் முட்டி கோலடித்து தனது அணிக்கு முன்னிலை தேடிக்கொடுத்தார். 27ஆவது நிமிடத்தில் மெக்சிக்கோ அணி பதில் கோல் திருப்பியது. ரால் ஜிமென்ஸ் இந்த கோலை அடித்து 1-1 என்ற கணக்கில் சமநிலையை ஏற்படுத்தினார். 77ஆவது நிமிடத்தில் மெக்சிக்கோ அணி வீரர் எட்சன் அல்வாரெஸ் கோலடித்தார். இதனால் மெக்சிக்கோ



அணி 2-1 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. இதன் பிறகு இரு அணியினரும் கோல் அடிக்க எடுத்த முயற்சிக்கு பலன் கிடைக்கவில்லை. முடிவில் மெக்சிக்கோ அணி 2-1 என்ற கோல் கணக்கில் அமெரிக்காவை வீழ்த்தி 10ஆவது முறையாக சம்பியனானது. (எ)




## விம்பிள்டன் ரென்னிஸின் காலிறுதியில் ஸ்வியாடெக்

லண்டன், ஜூலை 09

விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் காலிறுதிக்கு போலந்து வீராங்கனை இகா ஸ்வியாடெக் முன்னேறினார்.

“கிராண்ட்ஸ்லாம்“ போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனையான இகா ஸ்வியாடெக் டென்மார்க்கின் கிளாரா டாசன் உடன் மோதினார்.

இந்தப் போட்டியில் ஆரம்பம் முதலே அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய இகா ஸ்வியாடெக் 6-4, 6-1 என்ற நேர் செற் கணக்கில் கிளாரா டாசனை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். (எ)



## விம்பிள்டன் ரென்னிஸில் ஜோகோவிச் முன்னேற்றம்

லண்டன், ஜூலை 09

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

“கிராண்ட்ஸ்லாம்” போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான நோவக் ஜோகோவிச், அவுஸ்திரேலியாவின் அலெக்ஸ் டி மினார் உடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே அபாரமாக செயல்பட்ட ஜோகோவிச் 1-6, 6-4, 6-4, 6-4 என்ற செற் கணக்கில் அலெக்ஸ் டி மினாரை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். (எ)

## கனடா ஓபின் பட்மிண்டன் நிஷிமோட்டோ சம்பியன்

கால்கரி, ஜூலை 09

கனடா ஓபின் பட்மிண்டன் போட்டியில் ஜப்பான் வீரர் கென்டா நிஷிமோட்டோ சம்பியனானார்.

கனடா ஓபின் பட்மிண்டன் போட்டி கால்கரி நகரில் நடைபெற்றது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப்போட்டியில் ஜப்பானின் கென்டா நிஷிமோட்டோ, அமெரிக்காவின் விக்டர் லாய் உடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய கென்டா நிஷிமோட்டோ 21-13, 21-14 என்ற நேர் செற் கணக்கில் விக்டர் லாயை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றார். (எ)



## உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியல் வெளியீடு

டுபாய், ஜூலை 09

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலை சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ. சி. சி.) வெளியிட்டுள்ளது.

4ஆவது உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்புக்கு உட்பட்ட தொடர்களில் தற்போது அணிகள் விளையாடி வருகின்றன. அந்த வகையில் 4ஆவது உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்புக்கு உட்பட்ட அவுஸ்திரேலியா - மேற்கு இந்திய தீவுகள், இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டிகள் முடிவுக்கு வந்துள்ளன.

இந்தப் போட்டிகளில் அவுஸ்திரேலியாவும் இந்தியாவும் வெற்றி பெற்றுள்ளன. இதனை அடுத்து உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலை சர்வதேச கிரிக்கெட் பேரவை வெளியிட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் அவுஸ்திரேலியா (100 சதவீதம்) முதல் இடத்தில் உள்ளது. 2ஆவது இடத்தில் இலங்கையும் (66.67 சதவீதம்), 3ஆவது இடத்தில் இங்கிலாந்தும் (50 சதவீதம்), 4ஆவது இடத்தில் இந்தியாவும் (50 சதவீதம்) உள்ளன. (எ)

## 170 ஓட்டங்களுக்குள் சுருண்டது சிம்பாவே

புலவாயோ, ஜூலை 09

முதல் இன்னிங்ஸில் சிம்பாவே அணி 170 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி சிம்பாவேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் டெஸ்டில் தென்னாபிரிக்கா வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி புலவாயோவில் நடைபெற்று வருகிறது.

இதில், தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் 114 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 626 ஓட்டங்கள் குவித்த நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது. வியான் முல்டர் 367 ஓட்டங்களுடனும் கைல் வெர்ரைன் 42 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இதனையடுத்து முதல் இன்னிங்ஸை தொடங்கிய சிம்பாப்வே அணி ஆரம்பம் முதலே தென்னாபிரிக்க பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் தடுமாறியது. முடிவில் 43 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த சிம்பாவே அணி முதல் இன்னிங்ஸில் 170 ஓட்டங்களுக்கு சுருண்டது. (எ)

# குரோஷியா சர்வதேச செஸ் சம்பியனானார் கார்ல்சென்




ஜாக்ரெப், ஜூலை 09

குரோஷியா சர்வதேச செஸ் போட்டியில் நோர்வே வீரர் கார்ல்சென் சம்பியனானார்.

இந்த ஆண்டுக்கான கிராண்ட் செஸ் சுற்றுப்பயணத்தின் ஓர் அங்கமான சுப்பர் யுனைட்டட் ரேபிட் மற்றும் பிளிட்ஸ் சர்வதேச செஸ் போட்டி குரோஷிய தலைநகர் ஜாக்ரெப்பில் நடைபெற்றது. இதில் உலகின் “நம்பர் 01” வீரர் மாக்னஸ் கார்ல்சென், உலக சம்பியன் குகேஷ் உட்பட 10 வீரர்கள் பங்கேற்றனர்.

முதலில் நடந்த ரேபிட் பிரிவில் குகேஷ் (14 புள்ளி) 6ஆவது சுற்றில் கார்ல்செனுக்கு அதிர்ச்சி அளித்ததுடன் முதலிடம் பிடித்தார்.

இதைத்தொடர்ந்து பிளிட்ஸ் பிரிவு அதிவேக போட்டி நடைபெற்றது. ரேபிட் பிரிவில் தடுமாறிய கார்ல்சென் 18 சுற்றுகள் கொண்ட பிளிட்ஸில் அசத்தினார். இதில் முதல் நாளில் குகேஷை வீழ்த்திய கார்ல்சென், 2ஆவது நாளில் அவருக்கு எதிரான ஆட்டத்தில் 14ஆவது நகர்த்தலில் “சமன்” கண்டார். ஒரு சுற்று எஞ்சியிருந்த போதே பட்டத்தை உறுதி செய்து விட்ட கார்ல்சென் கடைசி சுற்றில் குரோஷிய வீரர் இவான் சாரிக்கை வீழ்த்தினார்.

18 சுற்று முடிவில் பிளிட்ஸ் பிரிவில் கார்ல்சென் 12.5 புள்ளியுடன் முதலிடம் பிடித்தார்.

ஒட்டுமொத்தத்தில் கார்ல்சென் (22.5 புள்ளி) சம்பியன் பட்டத்தை தனதாக்கினார். கிராண்ட் செஸ் தொடரில் ரேபிட் மற்றும் பிளிட்ஸ் போட்டியில் கார்ல்சென் தொடர்ச்சியாக கைப்பற்றிய 6ஆவது பட்டம் இதுவாகும். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயினை...

வந்து காலை 08.30 மணிக்கு தேரில் ஆரோகணிப்பார். காலை 9 மணிக்கு தேர் பவனி ஆரம்பமாகி முற்பகல் 10.30 மணிக்கு தேர் இருப்பிடத்தை அடையும். மாலை 04 மணிக்கு அம்பாளுக்கு பச்சை சாத்துதல் நடைபெறும்.

நாளை வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழா அதிகாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகும். காலை 7 மணிக்கு வசந்த மண்டப பூசை ஆரம்பமாகி அம்பாள் தீர்த்தமாட புறப்பட்டு செல்வார். (அ)

## உப்பைக்கூட...

வேண்டிய நிலையில் அரசாங்கம் உள்ளது என்று பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்துடன், நாட்டில் பொருட்களின் விலை அதிகரிக்கும் வரையில் காத்திருந்து அதன் பின்னர் அவற்றை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாகவும் நாமல் குற்றஞ்சாட்டினார். (அ)

## நீதிமன்ற...

அறிவிக்கும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகை யில்-

அரியாலை மனிதப் புதைகுழியில் மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப்பட் டுள்ள அகழ்வுப் பணிகளில் இதுவரை 44 பேரின் எலும்புக்கூடுகள் கண்டெடுக் கப்பட்டுள்ளன. 61 மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்த அகழ்வுகளை தொடர்ந்து கொண்டுசெல்ல அரசாங்கம் முழுமையான ஆதரவை வழங்கும். குறிப் பாக, நீதிமன்றத்தின் செயல்பாடுகளுக்கு முழுமையான ஒத்துழைப்புகளை வழங்க தயாராக உள்ளோம்- என்றார். (அ)

## சர்வதேச...

புரியப்பட்ட மிக மோசமான படுகொலை களுக்கான பிரதான சாட்சியமாக முள்ளி வாய்க்காலைப் போன்று, அரியாலை - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியை அடையாளப்படுத்தப்படுத்த முடியும்."- இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

அரியாலை - சித்துப்பாத்தி இந்து மயான பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளில் நேற்று முன்தினம் வரை 52 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அகழப்படும் பகுதி களில் இருந்து மழைநீரை வெளியேற்று வதற்காக அமைக்கப்பட்ட கால்வாய் களில்கூட 3 இடங்களில் என்புச் சிதிலங்கள் தென்பட்டுள்ளன என்றால் இனப்படுகொலைக்கான வலுவான சாட்சியமாக அந்த மனிதப் புதைகுழியை அடையாளப்படுத்த முடியும். ஆனால், 70 ஆண்டு காலமாகத் தமிழர்கள் மீது புரியப்பட்ட இனப்படுகொலைக்கான நீதி விசாரணையை சித்துப்பாத்தி மனித புதைகுழியோடு நிறுத்திக்கொள்ள இந்த அரசும் தன்னாலான பிரயத்தனங்களை முன்னெடுக்கக்கூடும் என்ற அடிப்படை யில், இன அழிப்புக்கான பொறுப்புக் கூறலும் பரிகார நீதியும் பரந்துபட்ட அளவில் அணுகப்பட வேண்டும் என்பதில் நாமும், நீதியை நாடும் எல்லாத் தரப்புகளும் மிகுந்த அவதானம் செலுத்த வேண்டும்.

உலகின் மனச்சாட்சியை உலுக்கும் உணர்வு சார்ந்த படுகொலை அடையாள மான செம்மணி மனித புதைகுழியோடு, மன்னார், கொக்குத்தொடுவாய், திருக் கேதீஸ்வரம், மண்டைதீவு உள்ளிட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பிலும் முறையான நீதி விசாரணைகள் ஆரம் பிக்கப்பட வேண்டும். -என்றார். (அ)

## அரியாலை...

நேற்று 13ஆவது நாளாக மேற்கொள் ளப்பட்ட அகழ்வுப் பணிகளில் மேலும் 4 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அரியாலை சித்துபாத்தி இந்து மயான மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகள் 13ஆவது நாளாக யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஏ. ஏ. ஆனந்தராஜாவின் முன்னிலையில், தொல்லியல் துறை பேராசிரியர் ராஜ் சோமதேவா, சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் ஆகியோரின் பங்கேற்போடு நேற்றும் முன்னெடுக்கப் பட்டது.

இதன்போது நேற்றைய தினமும் 4 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்தோடு இதுவரை அடையாளம் காணப்பட்ட மனித என்புத் தொகுதிகளின் எண்ணிக்கை 56ஆக அதிகரித்ததோடு இதுவரை முழு மையாக 50 என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. (அ)

## வடக்கு - கிழக்கு...

முப்படையினரும், பொலிஸாரும் பிறிதொரு கொள்கையில் செயல்படுகி றார்கள். மாறுபட்ட கொள்கைகளால் அரசாங்கம்மீதான மக்களின் நம்பிக்கை சிதைவடையும் என்று ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற் றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- எமது மக்களின் இருப்பை தக்கவைத் துக் கொள்வதற்காக நில அபகரிப்புக்கு எதிரான போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறோம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முப்படைகளும் பல்வேறு வழிகளில் நில அபகரிப்பில் ஈடுபடுகின்றன.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பொது காணிகளில் உள்ள மரக் கிளையை தமிழர் ஒருவர் வெட்டினால் அவர் கைது செய்யப்பட்டு, அவர் சிறைக்கு செல்ல நேரிடும். ஆனால், வடக்கில் மகாவலி வலயத்துக்குட்பட்ட 600 ஏக்கர் காணியை பெரும்பான்மை இனத்தை சேர்ந்த ஒருவர் சட்டவிரோ தமான முறையில் வெற்றிடமாக்கியுள்ளார்.

வவுனியா ஓமந்தை பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் உள்ள தனியார் காணி ஒன்றை பொலிஸார் துப்பரவு செய்துள்ளனர். காணி அபகரிப்பு நிறுத்தப்படும். காணி விடுவிக்கப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார். ஆனால் பொலிஸார், முப்படையினர் காணி அபகரிப்பு நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடுகிறார்கள்-என்றார்.

இதன்போது எழுந்து கருத்துரைத்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால, ஓமந்தை பொலிஸ் நிலையம் தொடர்பில் இன்று காலையில் அறிந்தேன். இவ்விடயம் தொடர்பில் பதில் பொலிஸ்மா அதிபருக்கு அறிவித் தேன். அந்த காணி துப்பரவு செய்தல் இடைநிறுத்தப்பட்டுள்ளது -என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய செல்வம் அடைக்கலநாதன், மிக்க நன்றி --என்றார்.

இதைத் தொடர்ந்து எழுந்து கருத்துரைத்த சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க, 600 ஏக்கர் அல்ல 46 ஏக்கர், பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ஒருவர்தான் மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான காணியை அழித்துள்ளார். மகாவலி அபிவிருத்தி அதிகார சபை அந்த நபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளது. அந்த வழக்கு செவ்வாய்க் கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட்டுள்ளது. ஆகவே, இந்த சம்பவத் துக்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை-என்றார். (அ)

## ஓமந்தை அரச காணியில் விகாரை...

அமைக்க முற்பட்டவேளை அங்கு கூடிய அரசியல்வாதிகள், பொதுமக்களால் தடுக்கப்பட்டதோடு விகாரை அமைக்கும் முயற்சியும் நிறுத்தப்பட்டுள்ளது.

குறித்த காணி தொடர்பில் கடந்த பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட நிலை யில் அதனை பொலிஸார் அபகரிக்கும் செயல்பாட்டை நிறுத்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் ஓமந்தை பொலிஸா ருக்கு குறித்த அரச காணியில் எவ்வித மான அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொள்ளவேண்டாம் என பிரதேச செயலாளரால் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் பொலிஸார் அதனைச் சுத்தம் செய்து அதனை சுற்றி வேலி அமைக்கும் பணியில் நேற்று ஈடுபட்டி ருந்தனர். இதனை அடுத்து அங்கு கூடிய வவுனியா மாநகர சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கூடி எதிர்ப்பு தெரிவித்ததோடு குறித்த காணிக்குள் பிரவேசித்து அங்கிருந்த பொலிஸாரை யும் வெளியேற்றினர்.

இதையடுத்து பொலிஸ் நிலையத்துக்கு சென்று பொலிஸ் பொறுப்பதிகாரியுட னும் கலந்துரையாடினர்.

இதன்போது பொலிஸ் பொறுப்பதிகாரி குறித்த காணியில் விகாரை அமைக்கும் திட்டம் இல்லை எனவும் தமது கட்டுப் பாட்டில் 2009 ஆம் ஆண்டிலிருந்து அக்காணி காணப்படுவதாகவும் அதனை தமது மைதான தேவைக்காகவே புனர மைப்பதாகவும் எவ்விதமான கட்டடங் களும் கட்டப்படாது எனவும் தெரிவித் ததை அடுத்து அங்கு கூடியிருந்தவர்கள் கலைந்து சென்றனர். (அ)

## அரியாலை மனித புதைகுழி தொடர்பில்...

நோக்கமாகும்.

வழக்கு தொடர்பாக 1995 - 2000ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இங்கே கடுமையான செய்தி தணிக்கை கள் இருந்த நிலையில் நீதிமன்றச் செயல் பாடுகளும் பொலிஸ் செயல்பாடுகளும் இல்லாது நிர்வாக ரீதியான செயல் பாடுகள் அனைத்தும் இராணுவத்தின் வசம் இருந்ததால் மக்கள் தாமாக முன் வந்து எந்த சாட்சியங்களையும் பதியவில்லை.

இவ்வாறான சூழ்நிலையில் நான் இந்த விடயத்தை இன்று கையில் எடுத் ததால் அரியாலை பகுதியில் இருக்கும் பாதிக்கப்பட்ட மக்கள் தமது சாட்சியங் களை எனக்கு தந்து கொண்டிருக்கின்ற நிலையிலேயே இந்த சாட்சியங்களை அச்சுறுத்துகின்ற அல்லது இந்த சாட்சி யங்கள் சாட்சி கூற வருவதை தடுப்பதாக இந்த செயல்பாடு நடக்கிறது.

அதாவது 1998ஆம் ஆண்டு முதலாவது குற்றவாளியான சோமரத்ன ராஜபக்ஷ வழங்கிய புதைகுழிகள் தொடர்பான அறிக்கையில், 15ஆவது புதைகுழியாக குறிப்பிடப்பட்ட ஏ-9 வீதி, பொன்னம்பலம் சந்திக்கு அருகாமையில் இருக்கின்ற இராணுவ முகாமுக்கு அருகில் இருக்கின்ற கிணற்றிலிருந்து அகழ்வு இடம்பெற்றது. அதற்குப் பின்னால் இப்போதும் இராணுவ முகாம் இருக்கின்றது. அந்த இராணுவ முகாம் அமைந்துள்ள தனியார் காணிக்குள் தான் அந்த மர்ம வாகனம் சென்றது. இதனை நான் அவதானித்தேன்.

நான் வசிக்கின்ற வீட்டுக்கான வீதியா னது எனது வீட்டுடனேயே முடிவடை கின்றது. ஆகையால் வேறொரு வாகனம் அந்த ஒழுங்கைக்கு வருவதற்கான அவசி யம் இல்லை. இரண்டு வாகனங்கள் இவ்வாறு வந்திருந்தன. இதனை நேரில் கண்ட ஒருவர் எனக்கு தெரிவித்தி ருக்கிறார். எவ்வாறான அச்சுறுத்தல்கள், எவ்வாறான செயல்பாடுகள் நடந்தாலும் இந்த வழக்கில் நான் உறுதியாக இருக்கிறேன் -என்றார். (அ)

## ஓமந்தை...

தொடர்பாக பிரதேச சபையில் தீர்மானம் எடுக்கப்பட்ட பிறகும் வவுனியா ஓமந்தை பகுதியில் பொலி ஸார் தனியார் காணிகளை அடாவடித்தனமாகக் கைப்பற்றி வைத்திருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதனையடுத்து, குறித்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால, " வவுனியா ஓமந்தை பொலிஸ் நிலையம் அருகில் உள்ள காணியை பொலிஸார் துப்பரவு செய்யும் வேலை உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளது. பொலிஸ்மா அதிபருடன் நான் பேசி அதற்கான உத்தரவை வழங்கியுள்ளேன். அந்த வேலை இனி இடம்பெறாது" எனத் தெரிவித்துள்ளார். (அ)

## அமெரிக்காவின்...

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற் றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், அமெரிக்கா உலக நாடுக ளுக்கு விதித்துள்ள பரஸ்பர தீர்வை வரி பற்றி மாறுபட்ட பல கருத்துகள் குறிப்பிடப்படுகின்றன. இந்த வரி இலங்கைக்கு மாத்திரம் விதிக்கப் படவில்லை என்பதை எதிர்க்கட்சிகள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இலங்கைக்கு விதிக்கப்பட்டுள்ள புதிய பரஸ்பர தீர்வை வரி தொடர்பில் அமெரிக்காவின் வர்த்தக பிரதிநிதிக ளுடன் பேச்சில் ஈடுபட்டுள்ளோம். இந்த பேச்சு குறித்து அமெரிக்காவுடன் இரு தரப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட் டதன் பின்னர் இறுதித் தீர்மானம் எடுக் கப்படும். அமெரிக்காவுடனான பேச்சு இலங்கைக்கு சாதகமானதாக அமையும்.

தீர்வை வரி திருத்தம் தொடர்பில் அமெரிக்கா 14 நாடுகளின் பெயர் பட்டியலை வெளியிட்டுள்ளது. இந்த நாடுகளுக்கு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி வரை மாத்திரமே நிவாரணமளிக்கப்பட்டுள்ளது. இந்த நாடுகள் அமெரிக்காவுடன் இரு தரப்பு ஒப்பந்தங்களை கைச்சாத்திடவில்லை. (அ)

## நீங்கள் தெற்கை...

வெளிநாட்டு பறவைகள் மன்னாரில் தான் தங்குகின்றன எனவே மன்னாரில் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்க முடியும். அதனை அரசு கவனத்தில் எடுக்கவேண் டும்.

இந்தியாவின் புரிந்துணர்வு ஒப்பந்தம் தேசிய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத் தல் என்று முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர கூறியுள்ளார். அவர் கடற்படை யில் றொட்டி சுட்டவர் போலுள்ளது. எங்களைப் பொறுத்தவரை பொருளா தார நெருக்கடி ஏற்பட்டபோது இந்தியா இலங்கைக்கு உதவி கரம் நீட்டியது. இந்தியா கொடுத்த பணத்தில் சரத் வீர சேகர உடம்பை வளர்த்துவிட்டு இப் போது இந்தியாவுக்கு எதிராக பேசுகிறார்.

எங்களைப் பொறுத்தவரை நாம் சொல்கின்றோம், தென்னிலங்கையை நீங்கள் சீனாவுக்கு கொடுங்கள். வடக்கு மற்றும் கிழக்கை இந்தியாவிடம் விடுங்கள். நாங்கள் அதனைப் பார்த்துக் கொள்வோம். இந்தியாவை பகைத்துக் கொண்டு இலங்கையால் ஒரு போதுமே செயற்பட முடியாது. இலங்கையின் நலன் விரும்பியாகவே இந்தியா உள்ளது - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# லலித், குகன் வழக்கு சி.ஐ.டிக்கு மாற்றம்!

## பொது பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 09

**லலித் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகி யோர் காணாமல் போனமை தொடர்பான விசாரணை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக் கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரி வித்துள்ளது.இந்த வழக்கு கடைசியாக 2014 ஆம் ஆண்டு மல் லாகம் நீதவான் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

விசாரணையில் எந்த முன்னேற்ற மும் ஏற்படவில்லை என்று கூறிய அமைச்சர், அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி 17 சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்துக்கு வழக்குத் தொடர்பான உண்மை களைப் பதிவு செய்துள் ளதாகவும் கூறினார்.

வழக்கின் முன்னேற்றம் குறித்து 2025 ஜூன் 3 அன்று பதில் பொலிஸ்மா அதிபர் அச்சுவேலி பொலிஸ் மற்றும் யாழ்ப்பாணப் பிரிவு குற்றப்பிரிவு அதிகாரிகளிடம் விசாரித்தார். அதன்படி, வழக்கு தொடர்பான அனைத்து கோப்புகளும் 2025 ஜூன் 11 அன்று குற்றப் புலனாய்வுத் திணைக்க ளத்துக்கு அனுப்பப்பட்டதாக விஜேபால கூறினார்.

இந்த விசாரணையை இனிமேல் சி.ஐ.டியின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய் வுப் பிரிவு கையாளும் என்று அமைச்சர் கூறினார்.

ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு தொடர்பான துறைசார்



மேற்பார்வைக் குழுவின் தலைவர் பாரா ளுமன்ற உறுப்பினர் நஜித் இந்திக பாராளுமன்றத் தில் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் விஜேபால பதிலளித்தார்.

போருக்குப் பின் காணாமல் போனவர்களான லலித் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோரின் வழக்கு குறித்தும் வடக்கு மற்றும் கிழக்கு மாகா ணங்களில் போருக்குப் பின்னரான காலத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகளின் முன்னேற் றம் குறித்தும் இந்திக கேள்வி எழுப்பினார். (அ)

# உள்ளூராட்சி சபை கட்டளை சட்டங்கள் தமிழில் வேண்டும்

## உமா சந்திரபிரகாஸ் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 09

மாநகர சபை மற்றும் நகரசபை சட்டத்தை தமிழ் மொழியில் மொழி பெயர்க்கவேண்டும் என கோரி வடக்கின் உள்ளூராட்சி ஆணையாளர் தேவனந்தினி பாபுவிடம் மகஜர் ஒன்று கையளித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் வடக்கு மாகாண அமைப்பாளரும் கொழும்பு மாநகர சபையின் உறுப்பினருமான உமா சந்திரபிரகாஸ் தெரிவித்துள்ளார்

யாழ்ப்பாணத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடை பெற்ற ஊடக சந்திப்பின்போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-மாநகர சபை மற்றும் நகரசபை சட்டத்தை தமிழ் மொழியில் மொழி பெயர்க்க வேண்டும் என நாம் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றோம்.

இது தமிழ் பேசும் மக்களுக்கான மொழி உரிமையை உறுதிசெய்யும் ஒரு முக்கிய சட்டமாக இருக்கின்றது.

ஆனால் இன்றுவரை அதற்கான தீர்வு கிடைக்காமை யால் மீண்டும் இதை வலியுறுத்தி கடிதம் வடக்கின் உள்ளூராட்சி ஆணையாளரிடம் கையளித்துள்ளோம்.

1897 ஆம் ஆண்டு உருவாக்கப்பட சட்டமானது இன்றுவரை திருத்தப்படாத ஒன்றாக இருக்கின்றது. பல வருடங்கள் நடைமுறையில் உள்ள மாநகர சபை சட்டத்தை தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்பட வேண்டும்.

இது உள்ளூராட்சி மன்றங்களின் செயல்பாடுக ளைப் புரிந்துகொள்வதற்கும், அதில் பங்கேற்பதற்கும் உதவும் என நம்புகின்றேன்.

எனவே, மாநகர சபை மற்றும் நகரசபை சட்டத்தை தமிழ் மொழியில் மொழிபெயர்க்க வேண்டும் என்ற கோரிக்கை மிகவும் அவசியமானது மற்றும் முக்கியத் துவம் வாய்ந்ததாக உள்ளது-என்றார். (அ)

# விசேட சுற்றிவளைப்பில் 75 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 09

நீர்கொழும்பு மற்றும் கம் பஹா ஆகிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவ ளைப்பு நடவடிக்கையின் போது 75 பேர் கைதுசெய்யப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊட கப் பிரிவு தெரிவித்துள் ளது.

பொலிஸ் விசேட அதிர டிப்படையினர், பொலிஸ ார் , இராணுவத்தினர், விமானப் படையினர் மற்றம் கடற்ப டையினர் உள்ளிட்ட 764 பேர் இணைந்து இந்த விசேட சுற்றி வளைப்பு நடவடிக்கையை மேற்கொண் டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 73 கிராம் ஹெரோயின் போதைப்பொரு ளும், 01 கிராம் 705 கிராம் ஐஸ் போதைப்பொருளும், 9 கிலோ 38 கிராம் கஞ்சா போதைப்பொருளும், 1139 லீற்றர் சட்டவிரோத மதுபா னமும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர் களில் பிடியாணை பிறப் பிக் கப்பட்ட 08 பேரும் திறந்த பிடியாணை பிறப்பிக் கப்பட்ட 05 பேரும் காணப்படுவதாக பொலிஸார் தெரி வித்தனர். (அ)

# தேசிய ஊடகக் கொள்கை 3 மாதங்களில் அறிமுகம்!

கொழும்பு, ஜூலை 09

தேசிய ஊடகக் கொள்கை மூன்று மாதங்களுக்குள் நடை முறைக்கு வரும் என்று வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்று வரும் கூட்டத்தின்போதே அவர் இதனைத் குறிப்பிட்டார்.

"இந்தக் கொள்கை ஊடக பங்குதாரர்களால் வகுக்கப் படும், அதே நேரத்தில் அரசாங்கம் ஒரு வசதியளிப்பவ ரின் பங்கை மட்டுமே வகிக்கும்" என்று அமைச்சர் கூறி னார். (அ)

# கொள்கலன் மோசடி குறித்து அறிக்கை விரைவில் சபைக்கு!

கொழும்பு, ஜூலை 09

கொள்கலன் அனுமதி மோசடி குறித்து விசாரித்த குழுவின் அறிக்கை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று துணை அமைச்சர் அனில் ஜெயந்த நேற்று செவ்வாய்க்கிழமை சபையில் தெரிவித்தார்.

அறிக்கை அதிகாரபூர்வமாக சமர்ப்பிக்கப்பட்டவு டன் அதன் மீதான விவாதம் நடத்தப்படலாம் என்றும் அவர் கூறினார்.

"பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குறிப் பிட்ட அறிக்கை சமூக ஊடகங்களில் பரப்பப்பட்ட ஒன்றாகும். அந்த குறிப்பிட்ட பதிப்பின் துல்லியம் குறித்து கவலைகள் உள்ளன" என்று அவர் கூறினார்.

இதற்கு பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அறிக்கையை இன்றும் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யலாம்-என்றார். (அ)

# சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளருக்கு நேற்றுப் பிணை

கொழும்பு, ஜூலை 09

சட்டவிரோத சொத்து குவிப்பு வழக்கு தொடர்பில் நடைபெற்று வரும் விசாரணை தொடர்பாக சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக சிறி சந்திர குப்தா பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலி ஜெய துங்க, 5 மில்லியன் ரூபாய் பெறுமதியான தலா மூன்று சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபருக்கு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (அ)

# தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டத்தில் கலந்துகொள்க!

## பொதுமக்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 09

தையிட்டி பகுதியில் தனியார் காணிகளை ஆக்கிர மித்து இலங்கை இராணுவத்தால் அமைக்கப்பட்டுள்ள தாகக் கூறப்படும் சட்டவிரோத விகாரைக் கட்டடத் துக்கு எதிராக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் போராட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தமிழ்தேசிய மக்கள் முன்னணி அழைப்பு விடுத்துள்ளது.

இப்போராட்டம் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில்,

இன்று புதன்கிழமை மாலை 4:30 மணி முதல் 6:30 மணி வரை மற்றும் நாளை 10 வியாழக்கிழமை பௌர்ணமி தினத்தன்று காலை 6:30 மணி முதல் மாலை 6:00 மணி வரை கவனயீர்ப்பு போராட்டமாக நடைபெறவுள்ளது.

விகாரை அகற்றப்பட்டு, காணிகள் உரிமையாளர்க ளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என வலியுறுத்தும் நோக்கத்தோடு நடைபெறும் இப்போராட்டத்தில் காணி உரிமையாளர்களும், பொதுமக்களும் இணைந்து பங்கேற்கவுள்ளனர்.

தமிழ்தேசிய மக்கள் முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இப்போராட்டத்தில் அனைத்து சமூகப் பிரதிநிதிக ளும், குடிமக்களும் திரளாக பங்கேற்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (அ)

# 1.2 மில்லியனுக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை!

கொழும்பு, ஜூலை 09

இந்த ஆண்டு இதுவரை மொத்தம் 1,204,046 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இது 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்க அதிகரிப்பை எடுத்துக் காட்டுவதாக இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் அண்மைய புள்ளிவிவரங்களின்படி, அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வந்துள்ளனர்.

அதன்படி, அந்த மொத்த எண்ணிக்கை 250,047 ஆகும். மேலும், 2025 ஆம் ஆண்டில் மொத்தம் 112,732 ரஷ்ய நாட்ட வர்களும், ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த 111,464 பேரும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இதற்கிடையில், ஜூலை மாதத்தின் முதல் ஆறு நாட்களில் 36,002 சுற்றுலாப் பயணிகள் இலங் கைக்கு வருகை தந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.